

கூட்டமைப்பு அழைத்தால் **அவர்களுடனும் பேசுவேன்!**

உள்ளே **பக். 03**



**சர்வதேச மகளிர்தின கவிதைகள்**

உள்ளே **பக். 08**



**வடக்கின் போர் நேற்று ஆரம்பம்**

உள்ளே **பக். 10**

**பக்கங்கள்: 12** — **விலை:20 ரூபா**

### இனி இது ரகசியம் அல்ல!

வடக்கே மேல்நாட்டுத் தூதுவர்களின் 'படையெடுப்பு' நடப்பதாக நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டேன் அல்லவா?

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி ரெப்லிட்ஸ் அம்மையாரைத் தமிழரசுக் கட்சியின் பக்கம் 02 ›››


# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 24 | வெள்ளிக்கிழமை 08.03.2019 | கதிர் 124


# வலிவடக்குக் கரையோரமாக 227 ஏக்கரை மிக இரகசியமாகச் சுவீகரிக்கின்றது அரசு!



## பிரமாண்டமான கடற்படைத் தளம் அமைக்கும் பொருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 08

காங்கேசன்துறையில் பொதுமக்களுக்குச் சொந்தமான 227 ஏக்கர் தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்கு அரசு மிக இரகசிய முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்தக் காணி சுவீகரிப்புக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன எனத் தெரியவருகின்றது.

பக்கம் 11 ›››

# சர்வதேசத்துக்கு அளித்த வாக்கை நிறைவேற்றவேண்டும் இலங்கை!



## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம்

கொழும்பு, மார்ச் 08

சர்வதேசக் கண்காணிப்பை நீடிக்கச் செய்து, உலகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு கட்டாயமாக நிறைவேற்றவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதற்கமைய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் புதிய பிரேரணைக்கு இலங்கை ஆதரவளிக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரியுள்ளது.

பக்கம் 11 ›››

## அட்மிரல் கரன்னகொடவின் கைதுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, மார்ச் 08

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை கைது செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கி உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

பக்கம் 11 ›››

## வவுனியாவில் ரூ.35 லட்சம் ரூபா கேட்டு 8 வயது சிறுவன் கடத்தல்



வவுனியா,மார்ச்08

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் 35 லட்சம் ரூபா பணம் கேட்டு 8 வயது சிறுவன் ஒருவன் கடத்தப்பட்டுள்ளான் எனக் கனகராயன்குளம் பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் பக்கம் 11 ›››

## யாழ்.வாள்வெட்டு அடாவடிகளின் முக்கிய சந்தேக நபர் மாட்டினார்!

### ஒரு வருடமாக தலைமறைவாக இருந்தவர்



யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வாள்வெட்டு வன்முறைகளின் பிரதான சந்தேகநபர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தனங்களப்பில் உள்ள வீடொன் பக்கம் 11 ›››

## காங்கேசன்துறைத் துறைமுகத்தின் அபிவிருத்திக்குக் காணி சுவீகரிப்பு

### அமைச்சரவையில் நேற்றுத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 08

காங்கேசன்துறைத் துறைமுகத்தை விரைவாக அபிவிருத்தி செய்வதற்கு காணிகளைப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கைகளை பக்கம் 11 ›››

## அலுவலகர்களுக்குரிய ரயில்களில் மகளிருக்கு மட்டும் தனிப் பெட்டிகள்



கொழும்பு,மார்ச்08

சர்வதேச மகளிர் தினத்தை கௌரவிக்கும் முகமாக இன்று முதல் தெற்கில் ஏழு அலுவலக ரயில்களில் பெண்களுக்காக மாத் பக்கம் 11 ›››

# மன்னார் மனிதப் புதைகுழி எச்சங்கள் 1499 - 1719 காலப் பகுதிக்கு உரியவை!



### நேற்று வெளியாகியது காபன் அறிக்கை

மன்னார், மார்ச் 08

மன்னார் நகர நுழைவாயிலில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 300 தொடக்கம் 500 ஆண்டுகள் இடைப்பட்டவை என்று காபன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1499 ஆம் ஆண்டு தொடக்கம் 1719 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் புதைக்கப்பட்ட மனித உடலங் பக்கம் 11 ›››

**விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு**

kalaikkathirnews@gmail.com

https://kalaikathir.online

# ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த அழுத்தம்

## தொடரும் என்கிறார் அமெ. தூதுவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 08

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவேண்டுமென்பதில் அமெரிக்கயா உறுதியாக இருக்கிறது. அதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்தும் இலங்கைக்கு கொடுத்து வருகிறோம் என அமெரிக்கத் தூதுவர் தூதுவர் அலெய்னா ரெப்லிடஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டமையுடன் அமெரிக்கஅரசின்நிலைப்பாடுகள்தொடர்பிலும்குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இங்குள்ள மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை நேரடியாகப் பார்த்தும் அறிந்தும் கொண்டிருக்கின்றோம். இந்த விடயங்கள் தொடர்பில் அரசுடன் பேசுவதற்கும் இருக்கின்றோம். இங்கு வந்து நிலைமைகளை அறிந்து கொண்டதற்கமைய இங்குள்ள மக்களைப் பாதிக்கும் விடயங்களை அரசுடன் பேசி எங்கள் பணிகளையும் தொடர உதவியாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வு தொடர்பில் பேசப்படுகின்றது. அந்த கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளில் இருந்த அமெரிக்கா வெளியேறியிருக்கின்றது.

ஆனாலும் அமெரிக்காவைப் பொறுத்தவரை அந்த கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட 30.1 மற்றும் 34.1 ஆகிய இரண்டு தீர்மானங்களையும் இலங்கை அரசு அமுல்ப்படுத்த வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. அதனை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாவே இருக்கின்றோம்.

ஆயினும் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. மிக மிக மந்த கதியிலேயே அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதிலும் நாம் எதிர்பார்த்ததையும் விட மெதுவாகவேஅதுநடக்கின்றது. அவ்வாறு இருந்தாலும் அதனை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவே உள்ளோம்.

குறிப்பாக காணாமல்போனோர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அலுவலகத்திலும் முன்னேற்றமில்லை. எல்லாமே மெதுவாகவே நடக்கின்றன. ஆகவே அந்தப் பணிகள் நடைபெற வலியுறுத்தி எங்கள் உதவிகளையும் நாங்கள் வழங்குவோம்.

உதவி என்பது பல வழிகளில் இருக்கின்றது. அரசியல் ரீதியான உதவிகளில் இலங்கை முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வெற்றியளிக்க வேண்டும். சுயாதீனமானதும் நிரந்தரமானதுமான ஆணைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட வேண்டுமென்பது மிக முக்கியமானது. இதற்கமைய குறிப்பாக காணாமல் போனோர் விடயத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பது கட்டாயம் .

மேலும் இந்த மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும், பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டும். அதற்காக அமெரிக்கா அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது–என்றார். (ஐ)

# ஐரோப்பிய ஒன்றிய முதலீடுகள்; இலங்கையுடன் நேற்றுப் பேச்சு

இலங்கையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முதலீடுகள் குறித்து பேச்சு இடம்பெற்றுள்ளது. இந்தப் பேச்சு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை முத லீட்டாளர்களுக்கிடையில் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. அமைச்சர் மலிக் சமரவிக்ரம தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டோங் லாய் மார்க் கலந்துகொண்டார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பொருளாதார நிபுணர்களுடன் வர்த்தகப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். இதன்போது இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. இந்தப் பேச்சு வினைத்திறனாக அமைந்ததாக ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொக்குவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்: சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வரில் மூவர் சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டனர்.

அதனையடுத்து சந்தேகநபர்கள் நால்வரின் விளக்கமறியலை வரும் 21ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் கருவப்புலம் வீதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், வீட்டின் முன் பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தச் சம்பவம் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி மாலை இடம்பெற்றது. வன்முறையை அடுத்து துரித விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. சம்பவ நடைபெற்ற அன்றைய தினம், பெற்றோல் குண்டு வீச வந்த இளைஞர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் இலக்கங்களை கருவப்புலம் வீதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காணொலின் மூலம் அடையாளம் காணப்பட்டன.

அதனையடுத்து மறுநாளே சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரால் வழங்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

மல்லாகத்தச் சேர்ந்த சுப்ரமணியம் துஷ்யந்தன், சுதுமலையைச் சேர்ந்த பாஸ்கரன் தனுசன், ஊரெழுவைச் சேர்ந்த சந்திரசேகரன் லதீசன், சுன்னாகத்தைச் சேர்ந்த ரதிகரன் துவாகரன் ஆகிய மூவரும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள்கள், கோடாரிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களும் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டன.

ஆவா குழுவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் சம்பவ இடம் பெற்ற வீட்டில் முன்னர் வசித்தார். அவர் தற்போது அங்கு இல்லை. அவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நால்வரும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். முறைப்பாட்டாளர் மன்றில் முன்னிலையானார்.

சந்தேகநபர்கள் சாட்சியின் முன்னிலையில் அடையாள அணிவகுப்பை நடத்த மன்று கட்டளையிட்டது. அடையாள அணிவகுப்பை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நடத்தினர். சந்தேகநபர்கள் நால்வரில் மூவரை சாட்சி அடையாளம் காட்டினார்.

சந்தேகநபர்கள் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் வைத்தே சாட்சிக்கு காண்பித்துள்ளனர். அதனால் அவர்களை இனங்காண்பதில் சாட்சிக்கு இலகுவானது. இந்தச் சம்பவத்துடன், சந்தேகநபர்களுக்குத் தொடர்பில்லை. அவர்களுக்குப் பிணை வழங்கவேண்டும் என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

சந்தேகநபர்களின் சட்டத்தரணி முன்வைத்த விண்ணப்பத்தை நிராகரித்த மன்று சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 21ஆம் திகதிவரை நீடித்தது. அன்றைய தினம்வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

# கூட்டமைப்பு இருக்கும் வரை அரசை தோற்கடிக்க முடியாது!

## பந்துல குணவர்த்தன திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு ஐக்கிய தேசிய கட்சி அரசுக்கு இருக்கும் வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத் திட்டம் தோல்வியடையும் என நாம் எதிர்பார்க்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களையும் தவிர்த்து பார்க்கும் போது ஐக்கிய தேசிய கட்சிக்கு 103 ஆசனங்கள் மாத்திரமே காணப்படு கின்றது உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவர் குழு நேற்றுப் பகல் யாழ்ப்பாணத்தில் சந்தித்தது.

அப்போது முக்கியமான சில விடயங்கள் அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டன என்று கூறப்படுகின்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், ஈ.சரவணபவன் மற்றும் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரே அமெரிக்கத் தூதரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் இரண்டு முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

*"கடந்த 3 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது இந்துக்கள் – கிறிஸ்தவர்கள் மோதல் மட்டுமல் அல்ல. அதற்குப் பின்னால் மர்மமான – கண்ணுக்குப் புலப்படாத சில சக்திகளின் அரூபக் கரங்கள் உள்ளன எனச் சந்தேகிக்கின்றோம். ஏற்கனவே பிரிந்து, பிளவுபட்டு நிற்கும் தமிழர்களின் ஐக்கியத்தை மேலும் குலைப்பதற்கான உள்நோக்கத்துடன் – இலக்குடன் – சில அரூபக் கரங்கள் இவ்விடயத்தின் பின்னணியில் செயற்பட்டிருக்கின்றன என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. சில அடிப்படைவாத சக்திகள் இதற்குள் ஊடுருவியுள்ளன.*

*"அடுத்து ஜெனீவா விடயம். ஏற்கனவே ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்காவுடன் சேர்ந்து தானும் அனுசரணைப் பணி வகுத்து நிறைவேற்றிய 30/01 மற்றும் 34/01 இலக்கத் தீர்மானங்களில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை கிஞ்சித்தேனும் நிறைவு செய்யவில்லை. இந்தச் சூழலில் இலங்கை இம்முறை புதிய பிரேரணைக்கு அனுசரணைப் பணி வழங்காமல் ஒதுங்குவது மட்டுமன்றி, பழைய தீர்மானங்களில் இருந்து வெளியேறவும் முஸ்தீபு செய்து வருகின்றது.*

*"ஆகவே, ஜெனீவா விவகாரத்தை ஒட்டி இலங்கை நடந்து கொள்ளும் மெத்தனப் போக்கைக் கண்டித்து, இலங்கையை அந்த விவகாரத்தில் சரியான பாதையில் வழிப்படுத்த வேண்டிய கட்டாயக் கடப்பாடு அமெரிக்காவுக்கும் உண்டு.*

*"இலங்கையில் சட்டவிரோதமாக 52 நாள்களுக்கு மஹிந்த அரசு அதிகாரம் செலுத்தியபோது, அத்தகைய தவறான அரசைப் பின்கதவால் கொண்டு வந்த இலங்கை ஜனாதிபதி தரப்புக்கு சாட்டையடி கொடுக்குமாற் போல சர்வதேச சமூகம் நடந்து கொண்டது. எந்த நாடும் பின்கதவால் வந்த மஹிந்த அரசை வரவேற்கவுமில்லை. வாழ்த்தவுமில்லை. இது இலங்கையில் பெரும் தாக்கமாக உணரப்பட்டது. சர்வதேச சமூகம் இலங்கையை ஒதுக்குமாற் போல கூட்டாகச் செயற்பட்ட காரணத்தினால் வேறு வழியின்றி ஜனாதிபதித் தரப்பு சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக் கோட்டுக்குள் தன்னை ஒழுங்குபடுத்த வேண்டியவரானார். அதனால்தான் ரணில் அரசு மீண்டும் அதிகாரத்துக்கு வரமுடிந்தது.*

*"ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்கள் தொடர்புபட்ட விடயத்தில் சர்வதேசத்துக்குத் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், பின்னடித்து, நழுவி, எதிர்மறையாகச் செயற்பட முனையும் இலங்கைத் தரப்பின் மீது சர்வதேசம் அதே போன்ற இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். அதன் மூலம் உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல், குற்றமிழைத்தோரைத் தண்டித்தல், இழப்பீடு வழங்கல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற – தான் உறுதியளித்த – விடயங்களில் இலங்கையை ஆக்கபூர்வமாக ஏதேனும் நடவடிக்கையை எடுக்கத் தூண்ட வேண்டும். சர்வதேசத்தின் அழுத்தமும், நடவடிக்கையும் இவ்விடயங்களில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்குப் புலனாக்கூடியதாக – வெளிப்படையானதாக – பகிரங்கமானதாக – இருக்க வேண்டும்.'* என்று குறிப்பிட்டார் சிவஞானம்.

சரியான கோரிக்கை செய்யுமா அமெரிக்கா?

-மின்னல்-

### யாழ்.பாணான்குளம் நாச்சி அம்மனுக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணம், கச்சேரிநல்லூர் வீதி பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை வேட்டைத் திருவிழாவும் 21 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தலும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ)

### ஓய்வூதியர் சங்க பொதுக் கூட்டம்

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேசசெயலகப் பிரிவின் 18 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ரி.எம்.செல்வராஜா தலைமையில் நடைபெறும்.

வலி.வடக்கு பிரதேச செயலக செயலாளர் திரு.ச.சிவஸ்ரீ, கணக்காளர் திரு.ப.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கோ.சங்கீதா, யாழ்.மாவட்ட அரச சேவை ஓய்வூதியச் சங்கத் தலைவர் திரு.பொ.கமலநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் இலங்கை அரசை நிறுத்த முடியும்!

## அதற்கு வழிவகை உண்டு என்பது தமக்குத் தெரியும் என்கிறார் யாழ். பல்கலை சட்டத்துறைத் தலைவர்

(எஸ்.நிதர்ஷன்)

இனப்படுகொலைக்குப் பொறுப்புக்கூறல் இடம்பெற வேண்டுமாயின் அது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகவே சாத்தியமாகும்.

நாம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்குச் செல்ல முடியாது - அது சாத்தயிமில்லை என்றும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஊடாகவே பொறுப்புக்கூறல் உள்ளிட்ட அனைத்தும் நடக்குமென்றும் கூறி யாரும் எங்களுக்கு மிளகாய் அரைக்கவேண்டாம். எங்களுக்குச் சர்வதேச நீதிமன்றம் குறித்தும், அதன் சட்டங்கள்,ஒழுங்குகள் குறித்தும் தெரியும். இவை எல்லாம் தெரியாமல் நாங்கள் சர்வதேச நீதிமன்றத்தை நாடுமாறு கோரவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ் பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன்.

எதற்கும் தயாரில்லாமல் -எதனையும் செய்யாத இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் கால அவகாசம் கொடுப்பதற்கு ஆதரவு தெரிவித்து கை உயர்த்துகின்றவர்கள் அரசியல் அறமற்றவர்கள் என்றும் அவர் சாடினார்.

'ஜெனீவாவும் ஈழத் தமிழர்களின் மனிதவுரிமை நகர்வும்' எனும் தொனிப் பொருளிளல் யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து ஐக்கிய அமெரிக்கா வெளியேறியிருந்தாலும் இன்று வந்திருக்கும் நகல் பிரேரணையில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பங்கு இருக்கின்றது. அதிலும் மேற்குலகத்திலேயே மனித உரிமைகள் விடயத்தில் தீவிரமாகச் செயற்படும் நாடுகளைத் தவிர்த்து நகல் பிரேரணை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கை அரசுடன் நெருக்கமான உறவைப் பாராட்ட விரும்பும் நாடுகளின் தீர்மானங்களின் அடிப்படையிலே நகல் பிரேரணை முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது.

இந்த நகல் பிரேரணை இலங்கை அரசைப் பாராட்டுகின்றதாகவும் நன்றி கூறுவதாகவும் வரவேற்பதுமாகவுமே இருக்கின்றது. அத்தோடு இலங்கைக்கு மீளவும் கால அவகாசம் கொடுக்கப்படுவதாகவும் உள்ளது. இவை எல் லாம் மிக வேதனையான விடயங்கள்.

கால அவகாசம் வழங்குவதென்பது அரசியல் விருப்பு. அரசியல் நாகரிகம் உள்ளவர்களிடம் கால அவகாசத்தைக் கொடுக்கலாம். ஆனால் கால அவகாசத்தை இலங்கை அரசு கேட்கவில்லை. அவ்வாறிருக்கையில் எதற்காக - யாருக்காக கால அவகாசத்தை வழங்கவேண்டியுள்ளது. இந்த இடத்தில் தமிழர்கள் என்ன செய்யவேண்டுமென்பதே முக்கியம்.

அதாவது மனித உரிமைகள் கவுன்ஸிலில் தொடர்ந்தும் கால அவகாசத்துடனான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றமையால் இதுவரை எங்களுக்குக் கிடைத்தவை என்ன? அல்லது இனிமேலும் கிடைக்கப் போவது என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

ஆகவே எதுவுமே இல்லாமல் தொடர்ந்தும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துடன் இருக்காமல் அதிலிருந்து வெளியேவரவேண்டும்.

தற்போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கையை விசாரிப்பதற்கானகாலம் கனிந்து வருகிறது என்று நான் கூறவில்லை. அதற்காக மனித உரிமைகள் கவுன் ஸிலில் தீர்வுக்கான அறிகுறி உள்ளதா என்றால் அங்கு ஏதும் இல்லை.

உண்மையான விசாரணை இடம்பெற்று நீதி கிடைக்க வேண்டுமென்றால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றினூடாகவே அது சாத்தியம். அவ்வாறு சாத்தியமான வழிகள் இருக்கின்றபோது அங்கு செல்லமுடியாது -அங்கு சென்று எதுவும் நடக்காது எனக் கூறித் தமிழர்களைத் தயவுசெய்து ஏமாற்றவேண்டாம்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குப் போகமுடியாது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஊடாக அல்லது கவுன்ஸில் தீர்மானங்களின் ஊடாகப் பொறுப்புக் கூறல் நடைபெறுகின்றதென தயவு செய்து எங்களுக்கு மிளகாய் அரைக்கவேண்டாம்.

எங்களுக்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரியும். சர்வதேசச் சட்டம் - ஒழுங்கு தெரியும். இவை எல்லாம் தெரியாமல் நாங்கள் சர்வதேச நீதிமன்றத்தைக் கோரவில்லை. எங்கள் நோக்கங்கள் எய்தப்படவேண்டுமென கருதினால் இலங்கை விவகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவேண்டும்.

இவ்வாறு நாம் கோருகின்றபோது இது சாத்தியமா எனக் கேட்போரிடம், தொடர்ந்து கால அவகாசம் கொடுப்பதால் என்ன கிடைக்கிறதென்று திரும்பக் கேட்கவேண்டும். ஏனெனில் அங்கு நடைபெறுவதையும் நடைபெற்றதையும் சகலரும் தற்போது அறிந்துகொண்டுள்ளனர். குறிப்பாக அங்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் இங்கு நடப்பது அதற்கு மாறாகவே உள்ளது.

இவ்வாறு இரட்டைத்தனத்துடன் செயற்படும் அரசுக்குத் தொடர்ந்தும் கால அவகாசம் கொடுப்பது முரணானது. முற்றிலும் அறம் அற்றது. இந்தக் கால அவகாசத்துக்கு கையை உயர்த்தி ஆதரவு தெரிவிப்பவர்கள் அரசியல் அறமற்றவர்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை - என்றார். (ஐ - 07)

## பிரபாகரன் உருவாகக் காரணம்; விளங்கப்படுத்தினார் ஜனாதிபதி!

கொழும்பு, மார்ச் 08

நல்லிணக்கம் தொடர்பாக பேசப்பட்டுவரும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரி, தான் பெற்ற அனுபவம் ஒன்றை பகிர்ந்துள்ளார்.

தான் சிறுவனாக இருந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களிடம் சிங்கள மக்கள் மோசமாக நடந்துகொண்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரயில் பயணம் தொடர்பில் எனக்கு அனுபவம் உண்டு. பொலனறுவையில் இருந்து கொழும்பிற்கு 7, 8 மணித்தியாலங்கள் பயணிக்கும் தபால் ரயில் சேவை உள்ளது. அந்த ரயில் அதிகாலை 3 அல்லது 4 மணிக்குக் கொழும்பு கோட்டையை அடையும்.

எனது பெற்றோர், அப்போது சிறுவர்களாக இருந்த எம்மை அழைத்துக்கொண்டு பொலனறுவை ரயில்வே நிலையத்துக்குச் செல்வார்கள். அப்போது கொழும்புக்குப் பயணிப்பதற்காகச் சுமார் 400, 500 பேர் ரயில் நிலையத்தில் குவிந்திருப்பார்கள். அந்த ரயில் மட்டக்களப்பிலிருந்து வரும்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக நாம் கதைக்கும் சந்தர்ப்பத்தில் நான் இந்த விடயத்தைக் கூறுகின்றேன். மட்டக்களப்பிலிருந்து வரும் ரயிலில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் நிறைந்திருப்பார்கள். பொலனறுவையில் ரயிலில் ஏறும்போது எமக்கு ஆசனங்கள் இருக்கா. அப்போது சிங்கள மக்கள் என்ன செய்தார்கள்? ஆசனங்களில் சிறு குழந்தைகளுடன் உறக்கத்தில் இருக்கும் தமிழ் மக்களை அடித்துத் துரத்திவிட்டு அந்த இருக்கைகளில் தாம் அமர்ந்துகொள்வார்கள். இதனை நான் ஒருநாளோ, இரண்டு நாள்களோ பார்க்கவில்லை. பல தடவைகள் கண்டுள்ளேன்.

அப்போது பயத்தில் 'ஐயோ சாமி' எனக் கத்திக்கொண்டு, அழுதுகொண்டு மலசலகூடங்களிலும் மறைவான இடங்களிலும் சிறு குழந்தைகளுடன் தமிழ் மக்கள் ஒளிந்துகொள்வார்கள். எமது மதிப்பிற்குரிய சிங்கள மக்கள் அந்த ஆசனங்களில் அமர்ந்துகொண்டு உறங்குவார்கள். இவ்வாறுதான் பிரபாகரன்கள் உருவானார்கள் - என்றார். (ஐ)

## போதைப்பொருள்களுடன் ஒருவர் வவுனியாவில் கைது

வவுனியா, மார்ச் 08

வவுனியாவில் கற்குழிப் பகுதியில் சட்டவிரோத மாவா போதைப் பொருளகளுடன் நபர் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கற்குழி ரயில் கடவைக்கு அருகில் மாமடுவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் ஒருவரிடமிருந்து 820கிராம் பொதி செய்யப்பட்ட மாவா போதைப் பொருள்களைக் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகப் பொலிஸார் கூறினர். (ஐ-100)

## கூட்டமைப்பு அழைத்தால் அவர்களுடனும் பேசுவேன்!

கொழும்பு, மார்ச் 08

நாட்டின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக, அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு தாம் எதிர்பார்த்துள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியுடனான பேச்சு தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கூட்டு எதிரணியில் உள்ள கட்சித் தலைவர்களுடன் நேற்று முன்தினம் மாலை பேச்சு இடம்பெற்றது. அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியுடனும் பேச்சு நடத்தியுள்ளேன். எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் எதிர்க் கட்சியிலுள்ள சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்துவது தமது பொறுப்பு என்றும் அவர்




தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள்விடுதலைமுன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க அந்தக் கட்சியுடன்பேச்சு இடம்பெற்றதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனையஎதிர்க்கட்சிகள்வேண்டுகோள் விடுத்தால் நாட் டின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்த தயாராகவுள்ளேன் – என்றார். (ஐ)

## ஈழத் தமிழரின் புகலிடக் கோரிக்கை குறித்து பிரிட்டனின் உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு!

லண்டன், மார்ச் 08

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர் ஒருவரின் மேன்முறையீட்டு மனு மீதான வழக்கில் பிரிட்டன் உயர் நீதிமன்றம் சாதகமான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது.

பெயர் குறிப்பிடப்படாத மேற்படி ஈழத்தமிழரின் உடலில் இலங்கை படையினரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் காணப்பட்டிருந்தன. எனினும், சித்திரவதையால் ஏற்பட்ட இந்த காயங்கள் மேற்படி நபரால் சுயமாக மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டைப் பிரிட்டனின் கீழ் நீதிமன்ற நீதிபதிகள் முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், அந்த நபரின் புகலிடக் கோரிக்கை வழக்கு நிராகரிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். மேன்முறையீட்டு மனு மீதான வழக்கில் பிரிட்டன் உயர்நீதிமன்றம் ஈழத்தமிழருக்குச் சாதகமான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் சட்டத்தரணி கணநாதன் கருத்து தெரிவிக்கையில்,இந்தத் தீர்ப்பானது இவ்வாறான முறையில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஏனைய ஈழத்தமிழர்களின் மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பான வழக்குகளுக்கும் ஒரு முன்மாதிரியான தீர்ப்பாகும் - என்றார். (ஐ)

## 100 கோடி டொலர்கள் செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

### அம்பாந்தோட்டையில் அமையும்

கொழும்பு, மார்ச் 08

அம்பாந்தோட்டையில் 100 கோடி டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தில், அமைச்சர் சாகல ரத்நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை ஒட்டியதாக கைத்தொழில் வலயத்தை அமைக்கும் திட்டம் அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்பட்ட போராட்டங்களால் தாமதமாகியுள்ளது என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க கூறினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மகளிர் மாண்பை மதிப்போம்!

இன்று சர்வதேச மகளிர் தினம்.

சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டிப்பது என்ற தீர்மானம் 1911 இல் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இப்போது நாம் 108 ஆவது வருடமாக மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

அடிமைத்தனம். எங்கிருக்கின்றதோ அங்குதான் சுதந்திரத்துக்கான தேடல் இருக்கும்.

எமது ஒவ்வொரு இல்லத்திலும் பெண் அடிமைத்தனம் நீடிக்கும் வரை பெண்களின் சமவுரிமைக்கான - சுதந்திரத்துக்கான - தேடலும் இருந்து கொண்டுதான் இருக்கும்.

பிரெஞ்சுப் புரட்சியின்போது பெண்கள் தங்களுக்கும் ஆண்களுக்கு நிகரான சுதந்திரம், சமஉரிமை, அரசனது ஆலோசனைக் குழுமங்களில் பிரதிநிதித்துவம் கேட்டுப் போராட்டத்தில் இறங்கினர். எட்டு மணி நேரம் மட்டும் வேலை. பணிக்கு உரிய வேதனம், அரசியலில் வாக்குரிமை ஆகியவையும் அவர்களின் புரட்சி செயல்பாட்டில் பட்டியலிடப்பட்டன.

அப்போது தொடங்கி சுதந்திரத்துக்கான இந்தத் தேடல் மெல்ல, மெல்ல உலகம் முழுவதும் பரந்து வியாயபித்து மகளிர் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இன்றும் தொடர்கின்றது.

பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தின் மூல வேர் மிகவும் பழமையானது.

1857 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிந்த பெண்கள் நிர்வாகத்திற்கு எதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் உலக மகளிர் தினத்திற்குப் பின்னணியாக அமைந்தது எனக் கூறப்படுகின்றது.

1910 ஆம் ஆண்டில் டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடைபெற்ற உலக மகளிர் சம்மேளனத்தில் ஜேர்மன் நாட்டவரான கிளாரா சேர்க்கின் என்பவரால் முன்வைக்கப்பட்ட யோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையை அடுத்தே இன்றைய தினத்தை - மார்ச் 8 ஆம் திகதியை - சர்வதேச மகளிர் தினமாக ஏற்றுக் கொள்ளும் பிரகடனம் வெளியிடப்பட்டது.

ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து மகளிரை விடுவித்து அவர்களுக்கான சமவுரிமையை உறுதிப்படுத்துவதற்குப் பிரதிக்ஞை எடுக்கும் நாளாக இன்றைய தினம் அமைகின்றது.

பெண்ணடிமைத்துவம், பெண்களை இழிவுபடுத்துதல், அவர்களைப் போகப் பொருளாகவும், சேவகர்களாகவும் பயன்படுத்தி, நுகர்ந்து, பின்னர் கசக்கி எறிதல், தொடர்ந்தும் அவர்களை நலிவுற்றோராய்க் கருதி, பாகுபாடு காட்டி, புறம் ஒதுக்குதல் போன்ற நியாயமற்ற அநீதிச் செயற்பாடுகளுக்கு எதிராக உலகத்தின் கவனத்தைத் திசை திருப்புவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், உலகம் போற்றும் மகளிரின் மாண்பை நிலை நிறுத்துவதும் இன்றைய மகளிர் தினத்தின் பிரதான இலக்குகளாகும்.

பொது வாழ்விலும், பொது அறிவிலும் வாழ்க்கைத் தரத்திலும், வாழ்வியல் முறையிலும், பழக்க வழக்கங்களிலும், பண்பியல்புகளிலும், நாகரிகத்திலும், சமூகச் சீர்நெறியிலும் உலகம் உச்சத்தின் எல்லையைத் தொடுமளவுக்கு உயர்ந்து விட்டதாகக் கூறுகிறோம்; கருதுகிறோம்,

ஆனாலும் பெண்மையைப் போற்றுதல், மகளிரை மதித்தல் போன்ற விடயங்களில் உலகின் உயர்ச்சி மெச்சத்தக்கதாக இல்லை என்பதே யதார்த்தம்.

மேற்குலகில் கூட பெண்களுக்கான சமவுரிமை மேம்பட்டிருப்பதாகக் கூறப்பட்டாலும் கூட பெண்களை மெல்லியராய் நோக்கிப் புறமொதுக்கும் பண்பியல்பிலிருந்து - நாகரிகத்திலிருந்து - மேற்குலகக் கலாசாரங்கள் கூட இன்னும் முழுமையாக வெளிவரவில்லை என்பதே யதார்த்தமாகும்.

உலகின் எந்த மூலையில் - எந்தச் சமூகத்தில் - எந்தச் சமுதாயத்தில் - பிறந்திருந்தாலும் பெண்களை மெல்லியராய்க் கருதி இளக்காரமாய் நோக்கும் கருத்தியல் பெரிதும் மாறவே இல்லை என்பதே உண்மை.

மூன்றாம் உலக நாடுகளில் இந்த நிலைமை மிகமிக மோசமாகும்.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக, தாதியாக நம் உறவின் அனைத்து அங்கங்களிலும் பிரிக்க முடியாத அளவுக்கு நீக்கமற நிறைந்திருக்கும் நம் இரத்தத்தின் இரத்தங்களை ஆணுக்கு இளக்காரமாய் - மெல்லியராய் - கருதி புறமொதுக்கும் போக்கு இலகுவில் மாறி விடப் போவதில்லை.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய புள்ளி விவரங்கள் இந்த உண்மையை எமக்கு எடுத்தியம்புகின்றன.

வளர்ந்து, மேன்மை அடைந்து விட்டதாகக் கருதப்படும் நமது தற்போதைய நவீன உலகில் - அண்மைக்கால அறிக்கைகளின்படி - மூன்றில் ஒரு பகுதி பெண்கள் தமது மிக நெருங்கிய உறவினர்களாலேயே உடல் ரீதியான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஐந்து பெண்களில் ஒருவர் வல்லுறவுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளால் எழுபது வீதப் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகளிருக்கு எதிரான வன்முறைகளும் அடக்கு முறைகளும் இரண்டு தளங்களில் கட்டவிழ்கின்றன. ஒன்று - குடும்பச் சூழல். மற்றையது சமூகச் சூழல்.

சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் வாழ்வியல் விடயங்களில் பெண்களை சமத்துவமாக மதித்து, அவர்களின் மாண்பைப் போற்றும்போதே சமூக மாற்றமும், சமூதாய மறுமலர்ச்சியும் சாத்தியமாகும்.

# போர்க்குற்ற விசாரணையில் இலங்கை அரசு குத்துக்கரணம்

## — ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் கருத்து —

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக இலங்கை குத்துக்கரணம் அடித்துள்ளதாக, அனைத்துலக செய்தி நிறுவனமான ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

பழைய காயங்களைக் கிளற விரும்பவில்லை என்று ஜனாதிபதி நேற்று முன் தினம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக ஏ.எவ்.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

2009 மே மாதம் முடிவுக்கு வந்த, இலங்கையின் 37 ஆண்டுகால கரந்தடிப் போரின் இறுதி மாதங்களில் குறைந்தது 40 ஆயிரம் தமிழ் பொதுமக்கள் இலங்கை அரச படைகளால் கொல்லப்பட்டனர் எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த நிலையில், போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நம்பகமான விசாரணைகளை நடத்தக்கோரி, 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலிடம் முறைப்படி கோரவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்."

போர்முடிந்துபத்தாண்டுகளாகிவிட்டன. நாங்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று கொழும்பில் நேற்று முன் தினம் தமது வதிவிடத்தில் செய்தியாளர்களிடம் ஜனாதிபதி சிறிசேன கூறினார்.

எமக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டாம் என்று அவர்களிடம் (ஐ.நா.விடம்) நான் கூறவுள்ளேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தை தோண்டியெடுத்து பழைய காயங்களை மீண்டும் கிளற வேண்டாம். கடந்த காலத்தை மறந்து நாம் சமாதானத்தில் வாழ்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம் என்று நான் அவர்களிடம் கூற விரும்புகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2015இல் அதிகாரத்துக்கு வந்ததும், இலங்கை போர்க்கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்துவார் என அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், போர்க்குற்றவாளிகள் நீதியின் முன்கொண்டு வரப்படுவதில் எந்த முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட முன்னைய கால அவகாசம் முடிவுக்கு வந்திருந்தது.

2015இல், நம்பகமான விசாரணைகளை நடத்த 18 மாத கால அவகாசத்தை ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் அளித்திருந்தது.

எனினும், எந்த விளைவுகளும் இல்லாதநிலையில், இரண்டு ஆண்டு கால அவகாசம் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது.

இந்த நிலையில், தமது சார்பில், கோரிக்கைகளை முன்வைப்பதற்காக ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு கட்சியின் மூன்று மூத்த உறுப்பினர்களை அனுப்பவுள்ளார் என ஜனாதிபதி சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர்கள், (ஐ.நர) சாதகமான பதிலைத் தருவார்கள் என்றும் எதிர்பார்க்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.நாவுக்குமுன்னர்வாக்குறுதிகளை அளித்திருந்தபோதும், ஜனாதிபதி சிறிசேன எந்த விசாரணைகளையும் ஆரம்பிக்கவில்லை.

இந்த நிலையில், கொழும்பு மெதுவாகவே செயற்படுகிறது என்று ஐ.நாவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் கவலை வெளியிட்டுள்ளனர் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பில் கடத்திக் காணாமற்போனோர் எண்ணிக்கை மூன்று மடங்காகும் சாத்தியம்

## சி.ஐ.டி. விசாரணையை வைத்து சுட்டிக்காட்டு

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது என்ற தகவல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ரியல்அட்மிரல்வசந்தகரன்னகொடவினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமனுவில்அவரது கோரிக்கையை ஏற்று கைது செய்வதைத் தடுக்கும் கட்டளையை வழங்கக் கூடாது எனக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ரஜிவ் என்ற இளைஞரின் தாயாரான சரோஜா நாகநாதனால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2008 - 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உள்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதுவரை கடற்படை அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலர் விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த வழக்கில் குற்றப்புலனாய்வுப் பிரினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் முக்கிய பல தகவல்கள் கிடைத்துள்ளன என உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் சரோஜா நாகநாதன் குறிப்பிட்டுள்ளார்.

கடற்படையின் வெலிசர முகாமில் இயங்கிய அணி ஒன்று வெள்ளை வான் ஒப்பரேஷனை முன்னெடுத்தது. செல்வந்த வர்த்தகர்களின் பிள்ளைகளான இளைஞர்களைக் கடத்திச் சென்று அவர்களை விடுவிக்கப் பெருந் தொகைக் கப்பம் கோரியது. ஒரு இளைஞனின் தாயாரிடம் மகனை விடுவிப்பதாக நகைகளைக் கப்பமாகப் பெற்றுவிட்டு மகனை விடுவிக்கவில்லை.

இந்த வெள்ளை வான் ஒப்பரேஷனின்போது கடற்படைத் தளபதியாக ரியல் அட்மிரல் வசந்த கரன்னகொட பதவி வகித்தார்.

அத்துடன், இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றை கடற்படை அதிகாரி ஒருவர் தனது மனைவியின் பிறந்த நாளுக்கு பரிசாக வழங்கியுள்ளார். மற்றொரு வாகனம், பாகங்கள் ஆக்கப்பட்டு வேறு வாகனங்களில் பொருத்தப்பட்ட நிலையில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளை அடிப்படையாக வைத்து அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# அங்கஜனுக்கு புதுப்பதவி!

கொழும்பு, மார்ச் 08

ஜனாதிபதியின் செயற்திட்டங்களின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையின் கீழ் தேசிய ரீதியில் செயற்படுத்தப்படும் கிராமசக்தி , சிறுநீரக நோய்த்தடுப்பு . போதைப்பொருள் தடுப்பு , பிள்ளைகளைப் பாதுகாத்தல் , சுற்றாடல் பாதுகாப்பு , தேசிய உணவு உற்பத்தி , ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா மற்றும் நிலைபேறான நோக்கு முதலிய நிகழ்ச்சித் திட்டங்களின் யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மாவட்டங்கள் மற்றும் அந்த மாவட்டங்களைச் சேர்ந்த சகல பிரதேச செயலகப் பிரிவுகளினதும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கருத்திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதி செயலகத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## நாளை

09.03.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: ரேவதி பி.இ 12.24 வரை
திதி : திருதியை பி.இ 2.02 வரை
சுபநேரம் : 3.24 – 4.54 வரை
இராகுகாலம் : 9.24 – 10.54 வரை

காலைக்கதிர் Kalaikathir


# வடக்கில் காணி விடுவிப்பு தொடர்வது அவசியமாகும்



யாழ்ப்பாண விஜயத்தின் பின் அமெ. தூதுவர் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 08

வடக்கில் இன்னமும் காணிகள் விடுவிப்பு இடம்பெறவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது அவர், வலிகாமம் வடக்கில் படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டார்.

மயிலிட்டி துறைமுக அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்ட அவர், அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இந்தப் பயணம் தொடர்பாக அவர் கீச்சகப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், இன்னமும் காணிகளை விடுவிக்க வேண்டிய தேவை உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ‘அனைத்திலும் சமத்துவம்’ சர்வதேச பெண்கள் தினம் இன்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி மார்ச்,08

கிளிநொச்சி மாவட்டத்தில் ‘அனைத்திலும் சமத்துவம் ’எனும் தொனிப்பொருளில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தினம் நடத்தப்படவுள்ளது.

இன்றுஎட்டாம்திகதி காலை ஒன்பது முப்பது மணிக்கு சர்வதேச பெண்கள் தின ஊர்வலம் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் வரும் பெண்கள் தின விழிப்புணர்வு ஊர்திகளுடன் ஊர்வலம் ஆரம்பமாகி டிப்போச் சந்தியைச் சென்றடையும். பின்னர் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலைநிகழ்வுகள், விசேட உரைகள், பெண்கள் தின பிரகடனம் போன்றவையும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர். சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினர். (இ

## காணாமற்போனவர்களுக்கு நீதி கிட்டவேண்டும் என்பதில் உறுதி!

### அமெ. தூதுவர் யாழ்ப்பாணத்தில் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 08

ஜெனீவாபிரேரணை குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வுகள் கிடைக்கவேண்டும் என்பதில் அமெரிக்க உறுதியாக உள்ளதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக் குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

கடந்த கால யுத்தத்தினால் பாதிப்புற்ற இலங்கையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்துக்கலந்துரையாடினேன். அவர்கள் அரசுடன் கலந்துரையாடித் தீர்வுகளுக்கு முயற்சிக்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்குத் தொடர்ந்தும் பயணங்களை மேற்கொள்ள ஆர்வமாக இருக்கிறேன் என்று அலெய்னா ரெப்லிட்ஸ் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## பணிநிறைப் பல்கலைக்கழக கல்வியாளர் ஒன்றியம்

பல்கலைக்கழக பணியில் இருந்து ஓய்வு பெற்ற கல்வியாளர்களை ஒன்றிணைத்து தமிழ் மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கல்வியியல், சூழலியல் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்காகக் குரல் கொடுப்பதற்கென பணிநிறைபல்கலைக் கழக கல்வியாளர் ஒன்றியம் என்ற அமைப்பினை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படிகூட்டம் யாழ்ப்பாணம் இல.121, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூடம் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை இடம்பெறும். பொருத்தமான உறுப்பினர்கள் நிகழ்விற்கு வருகை தந்து கலந்துரையாடி, ஆலோசனை வழங்கும்படி அமைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

# சமாதான நீதவான்கள் சங்க பொதுக்கூட்டம்

வட இலங்கை சமாதான நீதவான்கள் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். கலாநிதி.பீ.ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாடி அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக மனித உரிமைகள் திரியாய பவுண் டேஷன் யாழ் மாவட்ட பொறுப்பாளர் அருட்பணி நடராஜா சுபாஸும் கலந்து கொள்வர். (இ

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச்08



உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை -

**யாழ் பிரதேசத்தில் -**

ஊரணி, இலந்தைக்காடு, நாச்சிமார கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

வற்றாப்பளை,கேப்பாப்புலவு, முல்லைத்தீவு நகரம், உண்ணாப்பிலவு, கள்ளப்பாடு, செல்வபுரம், முல்லைத்தீவு விமானப்படை - I மற்றும் II, 59வது படைப்பிரிவு(14ESR- 01 மற்றும் 14 ESR- 02)> SFHQ வற்றாப்பளை, Mari Time Pattu 14 ESR, 12 VIR, 16 ESR, FMA, SLASC, 11 ESR,கூல்மென ஐஸ் தொழிற்சாலை, முல்லைத் தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.




## ஈகையால் இறை அன்பு

தவக்காலத்தில் உபவாசம் நோன்பு மாமிச தவிர்ப்பு செய்து இறை வேண்டுதலுக்காக யாத்திரை செய்வதும் வழிபாட்டில் கலந்து கொள்வதிலும் ஈடுபடும் பக்தர்களிடம் அதன் அர்த்தம் புரிந்து ஆன்மீக தேடலுக்கு பலமூட்டும் செயல்களால் வெளிப்படுத்த அழைப்பு விடுக்கிறார்.

கொடுமை தழைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணைகளை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் வறியோரை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வருவதும் உடை அற்றோரைக் காணும் போது அவர்களுக்கு உடுக்க கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! என்று நோன்பின் புனிதத்தை வெளிப்படுத்துகின்றார்.

சிலர் தன் சுயநலத்துக்காக நோன்பு நோக்கிறார்கள் சிக்கனப்படுத்தவும் உடல் எடையை குறைக்கவும், மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதிலும் மிகக் கவனமாக இருப்பதை காண்கின்றோம். இறை வார்த்தையில் எமது உபவாசம், ஒறுத்தல், நோன்பு யாவும் பிறருக்கு பயன்படும் விதத்தில் எம்மால் முடிந்த தான, தர்மங்கள், பிறர் துன்பங்களையும்போது அவை யாவும் இறை பற்றின் ஈகை செயல்களாக மாறும் பிறர் மகிழ்வில் நாம் இணைவதன் மூலம் இறை உறவை, சாயலை அயலானில் அன்பு செய்யவே பகிர்வுகள் எமது ஆன்மீக தேடலுக்கு அர்த்த மூட்டும் இதுவே இத் தவக்காலத்தின் அழைப்பாக ஏற்று சிலுவை பயணத் தில் இணைவோம்.

செ. யோசப்பாலா

# அரசைக் காக்க வடக்கு ஆளுநர் ஜெனீவாவுக்கு! அதிர்ச்சியில் காணாமற்போனோரின் உறவுகள்!!

யாழ்ப்பாணம், மார்ச் 08

வடமாகாண ஆளுநா சுரேன் ராகவன் இலங்கை அரசைப் பாதுகாப்பதற்காகவும், கால அவகாசம் கோருவதற்காகவும் ஜெனீவா செல்வது தமக்கு மிகுந்த மன வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாகக் காணாமல் ஆக்கப்பட்டவாகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளுநர் ஜெனீவா செல்வதற்கு முன்னர் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்து, அவர்களது உள்ள கிடக்கைகளை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு பின்னர் அவர் ஜெனீவா சென்று நியாயத்தைப் பேசவேண்டும். நீதியை பேச வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவாகளின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கலாரஞ்சினி தலைமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனா.

இதன்போது வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஜெனீவாவுக்கு அரசின் சார்பில் செல்லும் குழுவில் இடம்பெற்றிருக்கின்றமையால் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

ஆளுநர் ஜெனீவா செல்வதாக அறிந்திருக்கிறோம். அவரை சந்திக்க முயற்சித்தோம். ஆனால் அவர் கொழும்பில் இருக்கின்றமையால் அவரைச் சந்திக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆளுநர் போரின்வலியைச்சுமக்காதபோதும் ஒரு தமிழராக அரசின் சார்பில் ஜெனீவா செல்வது எமக்கு வருத்தமளிக் கிறது, அதிர்ச்சியளிக்கிறது.

இன அழிப்பிலிருந்து எஞ்சியவர்களை நாங்கள் கொண்டு சென்று ஒப்படைத்தோம். அவர்களையே நாங்கள் இன்றளவும் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் ஆளுநர் எமக்காக பேசவேண்டியவர். அந்தவகையில் ஆளுநரின் ஜெனீவா பயணம் எமக்கு அதிர்ச்சியளிக்கிறது.

ஆனாலும் ஜெனீவா செல்வதற்கு முன்னர் ஆளுநர் எங்களை சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அதன் ஊடாக எங்கள் உள்ளக் கிடக்கைகளை அறிந்து கொண்டு அதற்கமைய ஜெனீவாவில் அவர் நீதியைப் பேசவேண்டும் - நியாயத்தை பேசவேண்டும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பு - என்றனர். (ஜ -07)

# தெலுங்கானா விபத்தில் 7பேர் பலி!

தெலங்கானாவின் நல்கொண்டா பகுதியில் நேற்று முந்தினம் மாலை ஏற்பட்ட வாகன விபத்தில் 7 பேர் பலியாகினர். 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

நல்கொண்டாவில் கொண்டமல்லேபள்ளி மண்டலில் உள்ள சென்னாரம் கிராமத்தில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மதியம் அளவில் 23 பயணிகளை ஏற்றிக் கொண்டுவந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்தது, ஹைதராபாத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மாநிலப் போக்குவரத்துக் கழக பஸ்ஸின் மீது மோதியது. டயரில் திடீரெனத் தீப்பிடித்ததால், வாகனம் தனது கட்டுப்பாட்டை இழந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 7 பேர் உயிரிழந்தனர். 15 பயணிகள் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த உள்ளூர் மக்களும் போலிஸாரும் காயமடைந்தவர்களை மீட்டு, மருத்துவமனையில் சேர்த்தனர். அவசர சிகிச்சைக்காக கொண்டமல்லேபள்ளியில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள தேவரகொண்டா பகுதி மருத்துவமனையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்



# இந்தியா தாக்கிய பாகிஸ்தான் தீவிரவாதிகளின் முகாம்கள் சேதமின்றி உள்ளமை செய்மதிப் படங்களால் நிரூபணமாம்



கைபர் – பதுன்க்வா மாகாணத்தில் பாலகோட்டில் மதரஸா ஒன்றின் செய்மதிப்படத்தின் ஒரு பகுதி.

கடந்த மாதம் பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாத அமைப்பு ஒன்றின் தளத்தைத் தான் ஊடுருவித் தாக்கி அழித்ததாக இந்தியா அறிவித்த போதிலும், இந்தியத் தரப்பு குறிப்பிட்ட இடத்தில் அந்த அமைப்பின் கட்டங்கள் அப்படியே பாதுகாப்பாக இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன

ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் உயர் தொழில்நுட்ப செய்மதிப் படங்களை ஆய்வு செய்த போது ஜெய்ஷ் – இ – முகமது அமைப்பு நடத்தி வரும் சமயப்பள்ளிக் கட்டடம் வடகிழக்குப்பாகிஸ்தானில் இன்னும் முழுமையாக அப்படியே உள்ளது.

இந்தியா தரப்பில் பாலகோட் தாக்குதல் பற்றி கூறிய போது ஜெய்ஷ் இஸ்லாமிய குழுவின் பயிற்சி முகாமை அழித்ததாகத் தெரிவித்திருந்தது. மேலும் பல தீவிரவாதிகள் பலி என்றும் கூறியிருந்தது.

இந்நிலையில் சான்பிரான்சிஸ்கோவில் இருக்கும் தனியார் செய்மதி இயக்க நிறுவனமான பிளானெட் லேப்ஸ் இந்தப் படங்களை எடுத்துள்ளது. அதாவது மார்ச் 4ஆம் திகதியன்று, இந்தியத் தாக்குதலுக்கு 6 நாள்களுக்குப் பிறகும் அந்த இடத்தில் 6 கட்டடங்கள் அங்கு முழுமையாக இருக்கின்றமையை அவை காட்டுகின்றன.

இதுவரை இதுபோன்ற உயர் தொழில்நுட்ப செய்மதிப் படங்கள் பொதுவெளிக்குக் கிட்டியதில்லை. இந்தப் படங்களில் இந்திய அரசு தாக்கியதாகக் கூறப்படும் அதே கட்டடங்கள் அப்படியேதான் இருக்கின்றன.

ஏப்ரல் 2018 இல் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களில் காட்டப்பட்ட அதே நிலைகள் அப்படியே இந்தப் படங்களிலும் இருக்கின்றன. கட்டடங்களின் மேற்கூரையில் கூட கண்ணுக்குத் தெரியும் ஓட்டைகள் எதுவும் இல்லை. சுவற்றில் பிளவுகள் இல்லை. மதரசா அருகே உள்ள மரங்கள் சாய்ந்தமைக்குக் கூட அறிகுறி இல்லை என்கிறது ரோய்ட்டர்ஸ் ஆய்வு. சுருக்கமாக வான் வழித்தாக்குதல் நடந்ததற்கான தடயங்கள் இந்த நிலைகளின் மீது இல்லை என்கிறது இந்தப் படங்கள்.

இது தொடர்பாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் மத்திய வெளியுறவு அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்திடம் மின்னஞ்சல் மூலம் கேட்ட கேள்விகளுக்கு இன்னும் பதில் எதுவும் வரவில்லை.

இது தொடர்பாக கிழக்கு ஆசிய ஆயுதப் பெருக்கத் தடை திட்ட அமைப்பின் இயக்குநர் ஜெஃப்ரி லூயிஸ் கூறும்போது, 'இப்போது வெளியாகியுள்ள 'ஹை – ரிசல்யூஷன்' செய்மதிப் படங்கள் காட்டுவதின் படி வெடிகுண்டினால் சேதம் எதுவும் ஏற்பட்டதற்கான தடயங்கள் இல்லை' என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறும்போது, தாக்குதல் வெற்றிகரமாக இருந்திருந்தால், பயன்படுத்திய வெடிகுண்டுகள் பற்றி நமக்கு தெரிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கட்டடங்கள் சேதமடைந்திருக்க வேண்டும், ஆனால் இங்கு எதுவும் அப்படித் தெரியவில்லை என்றார்.

# காதலுக்காக செல்போன் கோபுரத்தின் உச்சி வரை ஏறிப் போராடி வென்ற யுவதி

காதலன் தன் காதலை நிராகரித்தமையை ஆட்சேபித்து 23 வயதுப் பெண் செல்போன் கோபுரத்தில் ஏறி போராட்டம் நடத்திய சம்பவம் தெலங்கானாவில் நேற்று முன்தினம் நடந்தது.

இது குறித்து வாரங்கல் நகரத்தில் உள்ள காகதியா பல்கலைக்கழகக் காவல்நிலைய அதிகாரி ராகவேந்திர ராவ் தெரிவித்தவை வருமாறு :-

வாரங்கலில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென ஓர் இளம் பெண் மல்லிகா (23), தன் காதலுக்கு நீதி கேட்டு செல்போன் கோபுரத்தின் உச்சி வரை ஏறித் தனது போராட்டத்தை நடத்தினார்.

மல்லிகா, என். பாபு என்பவரை கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் காதலித்து வந்தார். காதல் தொடங்கிய காலத்திலேயே இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்துள்ளனர்,

ஆனால் கடந்த சில நாள்களாக மல்லிகாவை பாபு தவிர்த்து வந்துள்ளார். அவருக்கு வேறொரு பெண்ணுடன் திருமணத்திற்காக நிச்சயதார்த்தம் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அவரைச் சமாதானப்படுத்தி செல்போன் கோபுரத்திலிருந்து இறக்கி காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பாபுவின் பெற்றோரையும் காவல்நிலையத்திற்கு அழைத்துவந்தோம். நடந்தவற்றை அவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்நிலையில் மல்லிகாவை பாபுவுக்கு மணம் முடித்து வைக்குமாறு அறிவுறுத்தினோம். அப்போது பாபு வும் அங்கிருந்தார். அவர்கள் ஒருவழியாக பாபுவை மல்லிகாவுக்கு திருமணம் செய்துகொடுக்க சம்மதித்தனர். பாபுவுக்கும் இதில் மகிழ்ச்சியே. பின்னர் மல்லிகா அவரது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

– இவ்வாறு வாரங்கல் காவல்நிலைய அதிகாரி தெரிவித்தார்.

# சென்னை சென்ட்ரல் இனி எம்.ஜி.ஆர். ரயில் நிலையம்

## காஞ்சியில் மோடி அறிவிப்பு

தமிழ்நாட்டுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த பிரதமர் நரேந்திர மோடி பல்வேறு நலத்திட்டங்களைத் தொடக்கி வைத்தார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்படும் என அவர் அறிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கிளாம்பாக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி அங்கு கூறியவை வருமாறு:-

வடஇந்தியாவின் காசி பகுதிக்குட்பட்ட வாரணாசி தொகுதி எம்.பியான நான் தமிழக மக்களைச் சந்திக்க காஞ்சி நகருக்கு வந்துள்ளேன். உலகின் மிகவும் அழகிய தொன்மைவாய்ந்த தமிழ் மொழியினால் நமக்கு பெருமை.



நம் நாட்டில் உள்ள நகரங்களில் மிகவும் சிறந்தது காஞ்சி நகரம் என கவி காளிதாஸ் கூறியுள்ளார்.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பல்வேறு கனவு திட்டங்களை எங்கள் அரசு நிறைவேற்றி வைத்துள்ளது. இதில் சில திட்டங்களுக்கு இன்று நான் இங்கே அடிக்கல் நட்டுள்ளேன். சென்னையில் எம்.ஜி.ஆர். சிலையை திறந்து வைத்துள்ளேன். எம்.ஜி.ஆர். என்னும் மாமனிதர் இந்த சினிமாவில் மட்டுமல்ல, மக்கள் இதயங்களிலும் நீங்காத முக்கிய சிறப்பிடத்தை பிடித்தவர். ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தனது ஆட்சியின் மூலம் அவர் நிறைவேற்றி வைத்தார். – என்றார்.

# மரணப்படுக்கையில் உள்ள தாயாருக்கு சிறுநீரகத்தைத் தானம் செய்யும் மகன்!

## அவனுக்காக நீதிமன்றில் கண்ணீர் விட்ட நீதிபதி

சென்னை,மார்ச் 08

மரணப்படுக்கையில் உள்ள தாயாருக்காக ஒரு சிறுநீரகத்தை தானம் செய்ய மகனுக்கு சட்டத்துக்கு உட்பட்டு அனுமதி வழங்க வேண்டுமென உடல் உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சை அங்கீகாரக் குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரியைச் சேர்ந்த 53 வயது வாணி என்ற பெண்மணி சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மரணப் படுக்கையில் உள்ள அவருக்கு நெருங்கிய உறவினர்கள் ஒரு சிறுநீரகத்தை தானம் செய்தால் பிழைக்க வாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் கூறினர்.

அதைத்தொடர்ந்து அவருடைய மகன் செந்தில்குமார் தனது ஒரு சிறுநீரகத்தை தானம் செய்ய முன்வந்தார். அதற்கு மருத்துவ அதிகாரிகளும் சம்மதம் தெரிவித்தனர். ஆனால், சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனை, இதுதொடர்பாக உடல் உறுப்பு மாற்று அறுவைசிகிச்சை அங்கீகாரக் குழுவின் ஒப்புதலை கோரியது. அந்த ஒப்புதல் குழு, சம்பந்தப்பட்ட நபரின் மனைவி ஒப்புதல் அளித்தால் மட்டுமே அவரது சிறுநீரகத்தை தானம் செய்ய முடியும் எனக் கூறி மறுத்தது.

இதையடுத்து செந்தில்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதுதொடர்பாக அவர் தாக்கல் செய்த மனுவில், மரணப்படுக்கையில் உள்ள எனது தாயாரைக் காப்பாற்ற உடனடியாக எனது சிறுநீரகத்தை தானம் செய்ய வேண்டியுள்ளது. தற்போது நான் மனைவியைப் பிரிந்து வாழ்கிறேன். ஆனால் மனைவியுடன் வாழ்கிறேன் எனக் கூறினால்தான் எனது சிறுநீரக அறுவை சிகிச்சைக்கு அதிகாரிகள் ஒப்புதல் அளிப்பார்கள் என நினைத்து மனைவியுடன் வாழ்வதாக தெரிவித்தேன். தற்போது மனைவியின் ஒப்புதல் கோருகின்றனர். அது நடக்காத காரியம் என்பதால் எனது சிறுநீரகத்தை தாயாருக்கு தானம் செய்ய அனுமதியளிக்க சம்பந்தப்பட்ட குழுவுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதி கே.ரவிச்சந்திரபாபு முன்பு நடந்தது. அப்போது நீதிபதி உணர்ச்சி வசப்பட்டு அழுதார். அதைப் பார்த்த கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் எஸ்.ஆர்.ராஜகோபால், இதுதொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன், என்றார். அதையடுத்து நீதிபதி, இந்த வழக்கில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அங்கீகாரக் குழு, மனுதாரரிடம் புதிதாக வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் அவரது சிறுநீரகத்தைத் தாயாருக்கு தானமாக அளிக்க அனுமதியளிக்க வேண்டும்" என உத்தரவிட்டார். நீதிபதி கண்ணீர் விட்டு அழுததால் சிறிதுநேரம் நீதிமன்ற வளாகம் அமைதியானது.

# வடகொரியாவில் றொக்கெட் ஏவுதளம் சீரமைக்கப்படுவதால் டிரம்ப் அதிருப்தி





வொஷிங்டன்,மார்ச் 08

வடகொரியா அரசு றொக்கெட் ஏவுதளத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக வெளியான செய்தியால் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் கடந்த மாத இறுதியில் வியட்நாமில் சந்தித்து பேசினர். இந்தச் சந்திப்பின்போது அணு ஆயுதங்களைக் கைவிடுதல், பொருளாதாரத் தடைகளை நீக்குதல் போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எந்த உடன்பாடும் எட்டப்படாமல் பேச்சு முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், டிரம்புடன் நடந்த பேச்சு தோல்வியில் முடிந்ததால், வடகொரியா தனது முக்கிய ராக்கெட் ஏவுதளத்தில் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

தலைநகர் பியாங்யாங்கில் உள்ள டோங்சாங்-ரி றொக்கெட் ஏவுதளத்தில் மறுகட்டமைப்பு பணிகள் நடைபெறுகின்றமையை வடகொரியாவின் செயற்கைகோள் படங்கள் காட்டுகின்றன.

இந்தத் தகவலால் அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார். வடகொரியா தனது றொக்கெட் ஏவுதளத்தைப் புனரமைப்பது குறித்த செய்தி உண்மையாக இருந்தால், அது தனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாக கூறினார்.

மேலும் வடகொரியாவில் என்ன நடக்கிறது என்பதைத் தாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் எனவும் அவர் கூறினார்.

## உலகின் இளம் செல்வந்தர் அமெரிக்க மொடல் அழகி!

வொஷிங்டன்,மார்ச் 08

அமெரிக்காவின் வர்த்தக பத்திரிகையான போர்ப்ஸ், 2019ஆம் ஆண்டுக்கான உலக பணக்காரர்கள் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில், அமெரிக்காவைச் சேர்ந்த மொடல் அழகியும், தொலைக்காட்சி நடிகையுமான கெய்லி ஜென்னர் (வயது 21) சுய சம்பாத்தியத்தில் உலகின் இளம் செல்வந்தர் என்ற தகுதியைப் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இவர் கடந்த 2016 ஆம் ஆண்டில் தனது பெயரில் தொடங்கிய அழகு சாதன பொருள்களை தயாரிக்கும் நிறுவனம், பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று லாபங்களை அள்ளிக்குவித்தது. தற்போது கெய்லி ஜென்னரின் சொத்து மதிப்பு சுமார் 100 கோடி டொலர் என போர்ப்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல மொடல் அழகி கிம் கர்தாசியான், கெய்லி ஜென்னரின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைத் தாக்குதலில் ஆப்கனில் 4பேர் உயிரிழப்பு



காபூல்,மார்ச்08

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் 4 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

இது குறித்து ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தரப்பில் கூறப்படுபவை வருமாறு:-

நன்கர்ஹர் மாகாணத்தில் உள்ள ஜலலாபாத் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டுமான தொழிற்சாலை ஒன்றில் கடந்த புதன்கிழமை தற்கொலைப் படைத் தாக்குதலில் 4 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் ஆப்கானிஸ்தான் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர் - என்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் இந் தத் தாக்குதலை தலிபான்கள், ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தி இருக்கலாம் என்று பாதுகாப்புப் படையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படையும் அங்கு முகாமிட்டுள்ளது.

கடந்த மாதம் ஆப்கன் ராணுவ தளத்தில் தலிபான்கள் நடத்திட தற்கொலைப் படை தாக்குதலில் 25 ராணுவ வீரர்கள் பலியாகினர்.

கடந்த மூன்று வருடங்களில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாத இயக்கங்களின் சொத்துகளை அடியோடு முடக்குவதற்கு பாக். தந்திரம்!

இஸ்லாமாபாத், மார்ச்08

இந்தியாவின் மும்பை நகரில் 2008 இல் நடந்த தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்டது எனக் கருதப்படும் ஜமாத்-உத்-தவா அமைப்பின் சொத்துகளை பறிமுதல் செய்து பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்படுகிறது.

புல்வாமா தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானில் இயங்கி வரும் பயங்கரவாத அமைப்புகள் மீது அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது ஜமாத்-உத்-தவா பயங்கரவாத அமைப்பு மற்றும் அதன் அறக்கட்டளையான பலா-இ-இன்சானியத் ஆகியவற்றுக்கு சொந்தமான மதரசாக்கள் (இறையியல் கல்லூரி) மற்றும் சொத்துகளைப் பாகிஸ் தான் அரசு பறிமுதல் செய்துள்ளது.

மும்பை தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் அரசியல் இயக்கமாக விளங்கி வரும் ஜமாத்-உத்-தவாவுக்கு சொந்தமாக 300 மதரசாக்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் பாகிஸ் தானில் இயங்கி வருகின்றன.

சக்வால், அட்டோக் மாவட்டங்களில் உள்ள மதரசாக்களை அரசு அதிகாரிகள் கைப்பற்றினர். மேலும், ஜமாத்-உத்-தவா அமைப்பின் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதற்கிடையே புல்வாமா தாக்குதலுக்கு காரணமான ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் பாகிஸ்தானில் இல்லை என அந்த நாட்டு இராணுவம் மறுத்துள்ளது.

## தன்னை வளர்த்தவரையே கடித்துக் குதறிய சிங்கம்; பின்னர் சுட்டுக் கொலை

### செக் குடியரசில் பரிதாபச் சம்பவம்



பிராகா,மார்ச் 08

வீட்டில் வளர்த்த சிங்கம் ஒன்று தன்னை வளர்த்தவரையே கடித்துக் கொன்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான செக் குடியரசில், ஸ்லின் பிராந்தியத்தில் உள்ள ஸ்டிசோவ் கிராமத்தை சேர்ந்தவர் மைக்கேல் பிராசெக் (வயது 33). இவர், தன்னுடைய வீட்டில் கூண்டுகள் அமைத்து 9 வயதான ஆண் சிங்கம் மற்றும் 2 வயதான பெண் சிங்கத்தை வளர்த்து வந்தார். இனப்பெருக்கம் செய்ய வைக்கும் நோக்கில், சிங்கங்களை வளர்த்து வந்த அவர் அதற்கான முறையான உரிமங்கள் எதையும் பெறவில்லை எனக் கூறப்படுகிறது. இதற்காக அந்த கிராம நிர்வாகம் அவருக்கு ஏற்கனவே அபராதம் விதித்தது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம், மைக்கேல் பிராசெக், தன்னுடைய பெண் சிங்கத்துடன் நடை பயிற்சிக்கு சென்றபோது, அந்த வழியாக சைக்கிளில் சென்ற நபரை சிங்கம் தாக்கியது. இது அங்கு பெரும் பிரச்சினையானது.

எனினும் செக் குடியரசின் சட்டப்படி, எந்த விலங்குகளையும் கட்டாயப்படுத்தி அப்புறப்படுத்தக்கூடாது என்பதால், அவை வேறு இடத்துக்கும் மாற்றப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த செவ்வாயன்று வழக்கம் போல உணவுவைப்பதற்காக கூண்டுக்குள் சென்ற மைக்கேல் பிராசெக்கை, ஆண் சிங்கம் கடித்துக் குதறியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். இது குறித்து தகவல் அறிந்து வந்த பொலிஸார் மைக்கேல் பிராசெக்கின் உடலை மீட்பதற்காக 2 சிங்கங்களையும் சுட்டுக் கொன்றனர்.

காலைக்கதிர் Kalaikathir





# என்னளவில் பெண்ணியம்

**சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி இக் கவிதைகள் இங்கு பிரசுரமாகியுள்ளன.**

'சொன்னாக் கேளுங்கோ
உவளை அணைக்காதையுங்கோ!'
மனைவி குறிப்பிட்டது
நான் உணவுகொடுத்துக் கொண்டிருந்த
கறுப்புப் பெட்டைப் பூனையை!

பெட்டைநாய், பெட்டைப் பூனைஎல்லாம்
என் மனைவிக்கு அலர்ஜி
குட்டிபோடுமாம், காவிக் கொண்டு திரிய ஏலாதாம்!
'நீயே பெண்ணினத்தை ஒதுக்கலாமா?'
என்ற வாதமெல்லாம் அவளிடம் எடுபடுவதில்லை!

நான் என் சுயதர்மத்தை ஏன் விடவேண்டும்?
தொடர்ந்து பெட்டைப் பூனையை
ஆதரித்துக் கொண்டிருந்தேன்
அதுக்கு மனுஷ நடத்தை விளங்கும் போல!
மனைவி முகத்தில் விழிப்பதில்லை!

'எங்கையிருந்து சொல்றன் எண்டு பாருங்கோ
அலையப் போறியள்!'
மனைவியின் சாபம் பலித்தது
பெட்டைப் பூனை
மூன்று பெட்டைக் குட்டிகள் போட்டுது
தாய்ப் பூனை
செத்தையிலும் சீலிங்குக்குள்ளும்
பொத்தி வைச்சுப் பாலூட்டி வளர்க்குது!

இரண்டு கிழமைகழிய
ஒவ்வொன்றாய்த் தலை நீட்டுகினம்
வீட்டு மூலையெல்லாம்
ஓடி ஓடி ஆராயினம்
வெருண்டோடாமல் அவையைவைச்சிருக்க
நான் பட்டபாடு!
பாலை. பாண் துண்டை வைக்கப்போய்
மனைவியிடம் மாட்டிக் கொள்ளுவன்
'ஏனப்பா பெட்டைக் குட்டிகளை ஆதரிக்கிறியள்?
கொண்டுபோய் வழிதெருவிலை விடுங்கோ!'
'பொறு பார்ப்பம்!'

மரம் தறிக்க வந்த ஶ்ரீ கேட்டான்:
'ஒரு பூனைக்குட்டி தருவியளோ?'
மனைவியின் முகம் மும்மடங்கு பொலிந்தது

முதல் முறையாகப் பூனையைத் தொடப்போய்
நகக்கீறல் வாங்கி
ஒரு குட்டியைப் பொதி செய்து அனுப்பினா!
எனக்குப் பூனைநாய்க் குட்டிகளை
கடத்தும் திறமையில்லை என்பது
அயலட்டையெல்லாம் பிரசித்தமாயிற்று

அடுத்தவாரம்
மருமகள் மாலதி வீட்டை போயிருந்தன்
'மாமா, எலி பெருகிப்போச்சு
வீட்டிலை ஒண்டையும் விடுகுதில்லை!'
'யாமிருக்கப் பயமேன்?
உனக்கொருபூனைக்குட்டி தாறன்!'

அடுத்த நாள் இரண்டாவது குட்டியைப் பொதிசெய்து
மாலதி வீட்டில் கொண்டுபோய் விட்டன்
இப்ப வீட்டிலை அமைதி
ஆணும் பெண்ணும் சமம்
பூனை கடத்துற விஷயத்தில் என்றாலும்!

மூன்றாவது குட்டியிலை எனக்கொருகண்
மஞ்சள் நிறம், நல்லவடிவு!
இப்ப தனியே தாய்ப்பால் குடிச்சு
மினுமினு எண்டு வருகுது
எனக்குநெருக்கமாகுது
நாய் வெருட்டினால் எதிர்த்து நிற்குது
நாய்க்கெட்டா உயரத்தில்
அம்மிக்கு அருகில்
அதற்கென ஓர் உண் கலம்!
ஏற்பாடுகளைப் பார்த்து மனையாள் பொருமுகிறாள்
'நீங்கள் இதைத் தொலைக்கமாட்டியள்!'
'விளங்கினால் சரி!'

நாளாக நாளாக குட்டிப் பூனைமேல்
பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்.
போக்குவரத்துக்காக
கதவில்
தாய்ப் பூனைக்கு ஒரு பெரிய ஓட்டை
குட்டிக்கு ஒரு சிறியஓட்டை
வைத்த ஐன்ஸ்ரைன்
பூனைகள் மேல் கவிதை புனைந்த எலியற்
ஆகியோர்மேல் மதிப்பு ஏறுமுகம்!
'அந்தரிக்கு வந்தனமும்!

பூனைக்கும் எனக்கும் நெருக்கம் அதிகரிக்க
மனைவிக்கும் எனக்கும் இடையே மௌனப்போர்!
'பூனையா நானா என்பதை முடிவு செய்யுங்கள்!'
என அவள் கேட்டுவிட்டால்?
விட்டுக் கொடுக்கக் கூடாது
மார்ச் எட்டில் எழுந்து சந்நதமாடிவிட்டு
ஓய்ந்துவிடும் பெண்ணியவாதிகள் போல் அல்லாமல்
என்னளவில் தினமும் போராடிக் கொண்டிருக்கிறேன்
இரண்டு பெண்களுக்காக
இன்னொரு பெண்ணுடன்!

- சோ.பத்மநாதன்

# இறைநிலைக்கே உயர்ந்து விட்டாள்!

பொறுமைக்கு இலக்கணமாய்
புவிமீது வந்திருக்கும்
தலையாய பிறவியென
தாயவளும் திகழுகிறாள்
மலையெனவே துயர்வரினும்
மனமதனில் அதையேற்று
குலையாத நிலையிலவள்
குவலயத்தில் விளங்குகிறாள்!

சிலைவடிவில் கடவுளரை
கருவறையில் நாம்வைத்து
தலைவணங்கி பக்தியுடன்
தான்தொழுது நிற்கின்றோம்
புவிமீது கருசுமக்கும்
கருவறையை கொண்டிருக்கும்
எமதருமை தாயவளும்
இறைநிலைக்கே உயர்ந்துவிட்டாள்!

பெண்பிறவி உலகினுக்கே
பெரும்பிறவி எனநினைப்போம்
மண்மீது மகான்கள்பலர்
கருசுமந்த பிறவியன்றே
காந்திமகான் உருவாக
காரணமே தாயன்றோ
சாந்தியொடு சமாதானம்
சன்மார்க்கமும் தாய்தானே!

பெண்புத்தி தனைக்கேட்டால்
பின்விளைவு நன்றாகும்
நன்புத்தி நவில்பவளே
நம்முடைய தாயன்றோ
துன்மதிகள் தானகல
துணிச்சலுடன் நின்றிடுவாள்
துயர்துடைக்கும் கரமாக
துணையாக அவளிருப்பாள்!

வாழ்க்கைக்கு துணையெனவே
வந்தவளே பெண்ணன்றோ
வள்ளுவரே இச்சொல்லை
வண்ணமுற கொடுத்தாரே
வாழ்வென்றும் வசந்தமாய்
ஆக்குவதும் பெண்தானே
வையகத்தில் வாழ்வாங்கு
வழங்குவதும் பெண்ணன்றோ!

பெண்மையைப் போற்றிடா
மண்ணுமே உருப்படா
பெண்மையை வெறுத்திடும்
வாழ்க்கையே விழந்திடா
பெண்மையே மண்ணினில்
பெருங்கொடை ஆகுமே
பெண்மையை தெய்வமாய்
போற்றியே வாழுவோம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண்
ஆஸ்திரேலியா







காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்திய ஸ்தாபன தின நிகழ்வில் நடைபெற்ற நாட்டியாஞ்சலியையும் கம்பவாரிதி இ. ஜெயராஜ் நடுவராக பங்கு பற்றிய சிறப்பு பட்டி மண்டபத்தையும் கலந்து கொண்ட மக்களையும் காணலாம்.

# ஐ.நா. தீர்மானத்தில் தளர்வுக்கு சர்வதேச சமூகம் இணக்கமாம்

## இலங்கை அரசு கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 08

இலங்கை தொடர்பான, ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானத்தின் சில பிரிவுகளைத் தளர்த்துவதற்கு அனைத்துலக சமூகம் விருப்பம் வெளியிட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது, அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

ஜெனீவா தீர்மானம் தொடர்பாக இலங்கை அரசு அனைத்துலக சமூகத்துடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் 2012, 2013 மற்றும் 2014 இல் இலங்கைக்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றியது.

படை அதிகாரிகள் மின்சார நாற்காலியில் அமர வைக்கப்படவுள்ளனர் என்றும் அனைத்துலக நீதி மன்றத்தில் நிறுத்தப்படவுள்ளனர் என்றும் முன்னைய ஆட்சியாளர்கள், பொய்யான பரப்புரைகளை மக்கள் மத்தியில் மேற்கொண்டிருந்தனர்.

2015இல் இலங்கை, தடைகளை எதிர்கொள்ளும் விளிம்பில் இருந்தது. அனைத்துலக தடைகளில் இருந்து நல்லாட்சி அரசே இலங்கையைப் பாதுகாத்தது. மஹிந்த ராஜபக்ஷவையும் நாங்கள் மின்நார நாற்காலியில் இருந்து பாதுகாத்துள்ளோம்.

இந்த நான்கு ஆண்டுகளில், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அரசை நடத்தியுள்ளோம். தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாம்.

மிகப் பொருத்தமான வகையில்



நாங்கள் அனைத்துலக சமூகத்துடன் இந்த விவகாரத்தைக் கையாண்டு வருகிறோம்.

தீர்மானத்தின் சில பிரிவுகளில் தளர்வை ஏற்படுத்த அனைத்துலக சமூகம் இணங்கியுள்ளது. பிரச்சினைகளை ஏற்படுத்தாமல், எமது முயற்சிகளுக்கு ஆதரவளியுங்கள் என்றார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல. (ஐ)



கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் 736 ஆவது நாளாக தொடர்கிறது. நேற்று முன் தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அருட்தந்தையர்கள் போராட்டக் களத்துக்குச் சென்று அந்த மக்களுக்குத் தமது ஆதரவை வழங்கினர். (ஐ)

# நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதற்கு மஹிந்த அணி ஆதரவு



## ஜே.வி.பியிடம் நேரில் உறுதியளிப்பு

கொழும்பு, மார்ச் 08

20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குக் கொள்கையளவில் ஆதரவளிப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியிடம் நேரில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். எனினும் 20ஆவது திருத்தத்துக்கான ஆதரவு தொடர்பில் முழுமையான ஆதரவை மஹிந்த தரப்பு தெரிவிக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்காக அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான பிரேரணை ஜே.வி.பியினால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அதற்கு ஆதரவு பெறும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க தாமும் தமது அரசியல் அணியும் ஆதரவளிப்போம் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு மாய மான்

## டக்ளஸ் எம்.பி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 08

உறவுகளை காணாமல் ஆக்கப்பட்டவர்களாக தொலைத்துவிட்டு அவர்களுக்காக தெருக்களில் அமர்ந்து நீதிகேட்டுப் போராடிக் கொண்டு இருக்கும் தமிழ் மக்களுக்கு உதவித் தொகையாக மாதாந்தம் 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்போவதாக அரசு கூறியிருப்பது அவர்களுக்குப் போதுமானதாக இருக்காது. கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இருந்தால் குறைந்தது 25,000 ரூபா மாதக் கொடுப்பனவாக வழங்கப்படவேண்டும். அத்துடன் இந்த 25,000 கொடுப்பனவானது உறவுகளைத் தொலைத்தகாலப் பகுதியை இன்றுவரை கணக்கிட்டு பயன்பெறக்கூடிய தொகையாக வழங்கப்படவேண்டும் என்று ஈ.பிடி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு :-

யுத்தகாலத்தில் பல சந்தர்ப்பங்களில் ஆள்கள் காணாமல் போன சம்பவங்கள் நடந்துள்ளன. ஆள்கள் காணாமற்போன விவகாரத்தை வெளியுலகுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் ஈ.பி.டி.பியே முதலில் காணாமற்போனோர் சங்கத்தை 1997ஆம் ஆண்டு ஆரம்பித்தது.

நாம் காணாமற்போனோர் சங்கத்தை ஆரம்பித்தன் நோக்கமானது, அந்தச் செய்தியை வெளியுலகுக்கு எடுத்துச் செல்வதற்கு ஊடாக காணாமற்போனவர்களைக் கண்டுபிடிப்பதும், அது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும், பரிகாரத்தையும்பெற்றுக்கொடுப்பதாகவுமே இருந்தது.

ஆனால் கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிகொண்ட கதையாக காணாமற்போனோர் விவகாரத்தை இன்று தவறானவர்கள் கையில் எடுத்துக் கொண்டு அதில் தமது சுயலாப அரசியலையும், பிழைப்பையும் நடத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

நுண்கடன்களால் நாளாந்தம் தற்கொலை செய்து கொண்டிருக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வியலை தூக்கிநிறுத்தவும், வறுமையில் வாழும் மக்களுக்கு இந்த வரவு - செலவுத்திட்டத்தில் ஆக்கபூர்வமான பரிந்துரைகள் எவையுமில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 1லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்கு வீடுகள் தேவையாக இருக்கின்றன. ஆனால் சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சிபீடமேறியதாக கூறிக்கொண்டிருக்கும் அரசோ கடந்த நான்கு வருடங்களில் எத்தனை சதவீதம் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது



என்ற கேள்விக்கு பூஜ்ஜியமே பதிலாகவுள்ளது.

இதேவேளை 10 இலட்சம் ரூபா பெறுமதியான 15 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கப்போவதாகத் தெரிவித்துள்ள அரசு, புதிதாக திருமணம் முடிப்பவர்களுக்கு ஒரு கோடி ரூபா வீட்டுக் கடன் வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது. அவ்வாறாயின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு குடும்பங்களாக கஷ்டப்படும் குடும்பங்களுக்கான கொடுப்பனவை 10 இலட்சத்திலிருந்து இரண்டு மடங்காக அதிகரித்து வழங்கவேண்டும்.

கிழக்கிலும் யுத்தம் நடந்தது. அங்கேயும் பெண்களைத் தலைமையாகக் கொண்டசுமார் 30 ஆயிரம் குடும்பங்களும், அங்கவீனர்களும், மாற்றுத்திறனாளிகளும் வறுமையில் வாழ்கின்றார்கள். அங்கும் வேலைவாய்ப்புக்காக ஏங்கும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளும் இருக்கின்றார்கள். அவர்களின் வறுமையைப் போக்கவும், வளமான எதிர்காலத்திற்காகவும் இந்தவரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான பரிந்துரைகளும் உள்ளடக்கப்படவில்லை. இது அந்த மக்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத் துள்ளது.

சிறுபான்மை மக்களின் வாக்குகளால் ஆட்பீடமேறியதாக கூறிய இந்த அரசாங்கமும், அவர்களை ஆட்பீடமேற்றியதாகக் கூறிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கடந்த நான்கு ஆண்டுகளாக வரவு - செல்வுத் திட்டங்களாக முன்மொழிந்த ஒரு திட்டத்தையாவது இதுவரை நடைமுறைப் படுத்தியிருக்கவில்லை.

அரசு என்னதான் திட்டங்களையும், முன்மொழிவுகளையும் வாக்குறுதிகளாக முன்வைத்தாலும் ஆட்சியை ஏற்படுத்தியதாகவும், ஆட்சியைப் பாதுகாப்பதாகவும் கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே அரசின் பரிந்துரைகள் செயல் வடிவம் பெறுவதற்கான வழிகாட்டலையும், அழுத்தங்களையும் அரசுக்கு கொடுக்கவேண்டும்.

துரதிஷ்டவசமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்ற அக்கறையோ, ஆற்றலோ இல்லை என்பதாலேயே, தமிழ்மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தீராப் பிரச்சினைகளாக தொடர்கின்றன –என்றுள்ளது. (ஐ)

# ‘வடக்கின் பெரும் போர்’ நேற்று கோலாகல ஆரம்பம்













யாழ்ப்பாணம், மார்ச் 08

‘வடக்கின் போர்’ என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும். இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி நேற்றுக் காலை கோலாகலமாக ஆரம்பமானது.

இரண்டு கல்லூரிகளின் முதல்வர்கள் தலைமையில் ஆரம்பமான இந்தப் போட்டியில் வீரர்கள் அறிமுகத்தையடுத்து நாணயச் சுழற்சி இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 181 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனையடுத்து ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டது.

# சொந்த ஊரில் விளையாட்டு மைதானத்தில் பார்வைக் கூடத்தை திறக்க மறுத்த டோனி!




இந்திய அணியின் முன்னாள் தலைவர் மஹேந்திர சிங் டோனி தற்போது களத்தில் இருக்கும் ஆலோசகராகச் செயல்பட்டு வருகிறார். போட்டிகளில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளின் போது தகுந்த ஆலோசனைகளை வழங்கி அணி உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி வருகின்றார்.

இந்த நிலையில், மஹேந்திர சிங் டோனி பிறந்த ஊரான ராஞ்சியில் அவரைக் கௌரவிக்கும் வகையில் அங்கு உள்ள கிரிக்கெட் மைதானத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள பார்வைக் கூடத்துக்கு எம்.எஸ்.டோனி பவிலியன் என்று பெயரைச் சூட்டத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி. டோனியின் பெயர் சூட்டப்பட்டுள்ள பவிலியனைத் திறந்து வைக்க அவருக்கே அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், இந்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார் டோனி. இந்த மறுப்புக்குப் பின்னணியில் ஒரு காரணம் உள்ளதாம். அதாவது, நானே அந்த கலரியைத் திறந்து வைத்தால் சொந்த ஊரில் அந்நியனாக நினைக்கத் தோன்றும் என டோனி கூறியுள்ளாராம்.

# நடப்புச் சம்பியன் வெளியேற்றம்!



ஐரோப்பிய உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து, நடப்புச் சம்பியனானகளான ரியல் மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் நெதர்லாந்துக் கழகமான அஜக்ஸ் அணியால் மட்ரிட் வெளி யேற்றப்பட்டுள்ளது.

அஜக்ஸின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் முன்னிலை பெற்றிருந்த நிலையில், ரியல் மட்ரிட்டின் மைதானத்தில், இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில், சக முன்கள வீரரான டுஸன் டடிக்கிடமிருந்து பெற்ற பந்தை, போட்டியின் ஏழாவது நிமிடத்தில் அஜக்ஸின் மத்தியகள வீரரான ஹக்கீம் ஸியெச் கோலாக்க அவ்வணி ஆரம்பத்திலேயே முன்னிலை பெற்றது.

பின்னர், 18ஆவது நிமிடத்தில் டுஸன் டடிக் கொடுத்த பந்தை அவரின் சக முன்கள வீரரான டேவிட் நெரெஸ் கோலாக்க தமது முன்னிலையை அஜக்ஸ் இரட்டிப்பாக்கியது. தொடர்ந்த போட்டியின் 62ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்ற டுஸன் டடிக், அஜக்ஸின் முன்னிலையை 3:0 என்ற கோல் கணக்கில் உயர்த்தினார்.

பின்னர், 70ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பெற்ற றியல் மட்ரிட்டின் மார்கோ அஸென்ஸியோ முன்னிலையை ஒரு கோலால் குறைத்தார். எனினும் அடுத்த இரண்டாவது நிமிடத்தில், அஜக்ஸின் லஸே ஸ்கோனே ஒரு கோலைப் பெற்றதுடன், இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் வென்ற அவ்வணி, 5;3 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (ஐ)

# ரியல் மட்ரிட் முன்னாள் பயிற்சியாளர் மீண்டும் அணியில் இணைய விருப்பம்

ஐரோப்பிய உயர்தர உதைபந்து கழகங்களில் ஒன்றான ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜோஸ் மௌரின்ஹோ மீண்டும் கழகத்தின் பயிற்சியாளர் பணிக்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

இவர் கடந்த 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரியல் மட்ரிட் அணியின் பயிற்சியாளரராகச் செயற்பட்டு வந்தார்.

ரியல் மட்ரிட் அணியின் தற்போதைய தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டு வரும் சண்டியாகோ சொலரி மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையில் முன்னாள் பயிற்சியாளரை மீள அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த சில போட்டிகளின்போது ரியல் மட்ரிட் அணி அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்து வந்தது.

பேர்ணபியூவில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளின் போது பார்ஸிலோனா அணியுடன் தொடர்ச்சியான தோல்விகளை எதிர்கொண்டதுடன், சாம்பியன்ஸ் லீக் தொடரில் அஜாக்ஸ் அணியுடன் நொக்அவுட் முறையில் ரியல் மட்ரிட் அணி வெளியேறியது.

கடந்த 16 வருடங்களில் ரியல் மட்ரிட் அணிக்காக 13 பயிற்சியாளர்களை அதன் தலைவர் ஃளோரென்டினோ பெரெஸ் தெரிவு செய்துள்ளார்.

இந்தநிலையில், மௌரின்ஹோ தொடர்பாக அதிக விருப்பங்கள் வெளியாகியிருந்த நிலையில், சொலரியைப் பதவி நீக்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மௌரின்ஹோ ஒரு சாத்தியமான பயிற்சியாளராகச் செயற்படுவார் என்றும், இரண்டாவது முறையாகவும் அவரைப் பதவியில் இருத்துவது அணிக்கு உகந்தது என்று பல தரப்பிலிருந்தும் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## வலி.வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைப் பகுதியில், காங்கேசன்துறை மத்தி மற்றும் நகுலேஸ்வரம் ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ள 232 ஏக்கர் காணிகளே சுவீகரிக்கப் படவுள்ளன.

கடற்படை முகாமுக்கு 163 ஏக்கர் காணியும், சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்காக சுற்றுலா அதிகார சபைக்கு 64 ஏக்கர் காணியும் சுவீகரிக்கப் படவுள்ளன.

சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்காகச் சுவீகரிக்கப்படும் காணியிலேயே காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையும் உள்ளடங்குகிறது.

சுவீகரிக்கப்படவுள்ள காணிகளில் பெரும்பாலானவை தனியாருக்குச் சொந்தமானவை.

இரகசியாமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் காணி சுவீகரிப்பு முயற்சி, காணிசமான படிமுறையைக் கடந்து விட்டது எனக் கூறப்படுகின்றது.

அந்தப் பகுதியில் அளவை செய்வதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டு, தனியார் காணி உரிமையாளர்களுக்கும் தெல்லிப்பளைப்பிரதேசசெயலகத்தில் இருந்து நேற்றுக் கடிதம் மூலம் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்பு படிமுறையின், 'பிரிவு – 2' பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

கடற்படை மற்றும் சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்காகச் சுவீகரிப்படவுள்ள காணிகளில் பெரும்பாலானவைத் தனியாருக்கு சொந்தமானவை.

காங்கேசன்துறை துறை முகத்தை அண்டிய இந்தப்பகுதி எதிர்காலத்தில்சுற்றுலாத்துறைக்கு மிக உகந்த பகுதியாகக் கணிக்கப்பட்ட பகுதியாகும்.

அத்துடன் தமிழர்களின் பாரம்பரிய, புராதன வழிபாட்டிடங்களையும் கொண்ட பகுதி இது. சுவீகரிக்கப்படும் பகுதிக்குள் சுமார் 7 வழிபாட்டிடங்கள் உள்ளடங்குகின்றன.

சுவீகரிக்கப்படும் காணியில், ஸ்ரீமத் நாராயண ஆலயத்துக்கு (கிருஷ்ணர் ஆலயம்) சொந்தமான 47 ஏக்கர் காணி, கதிரையாண்டவர் ஆலயத்தின் 25 ஏக்கர் காணி, சோலை வைரவர் மற்றும் சில ஆலயங்களின் 25 ஏக்கர் காணி, சடையம்மா சமாதி ஆலயத்தின் 20 ஏக்கர் காணி மற்றும்புராதன நல்லதண்ணீர்க் கிணறு மற்றும் தனியார் காணிகள் இதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன், பழைய தெல்லிப்பழை வைத்தியசாலை காணியும் இதற்குள் உள்ளடங்குகிறது.

காணி சுவீகரிப்புப் படிமுறையில், 'பிரிவு – 2' படிமுறையென்பது, காணி உரிமையாளர்களுக்குத் தகவல் வழங்கி, அளவீட்டுக்கான படிமுறையாகும். காணியை அளவீடு செய்யும்படியான அறிவித்தல், நில அளவைத் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுவிட்டது. எந்தச் சமயத்திலும் காணி அளவீட்டுப் பணிகள் நடக்கலாமெனத் தெரிகிறது.

இதேவேளை, இந்த காணி சுவீகரிப்பு முடிவு வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் எடுக்கப்பட்டதாவும், அந்தச் செயலணியின் அறிவித்தலின்படியே தாம் நடக்கின்றனர்எனவும்தொடர்புடைய அரச அதிகாரிகள் கூறினர். (ஐ)

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு இதில் 15 ஏக்கர் காணியை கைமாற்றிக் கொடுப்பதற்கு வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைவாக இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுமார் 15 ஏக்கர் கொண்ட காணியைக் கைமாற்றிக் கொடுப்பது சிறந்தது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்குத் தேவையான நிதியை இந்திய அரசிடம் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அட்மிரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரால்தாக்கல்செய்யப்பட்ட மனுமீதானதீர்ப்பைவழங்கும்வரை இந்த இடைக்காலத் தடை நடைமுறையிலிருக்கும் என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது.

அத்துடன், அட்மிரல் வசந்த கரன்னகொடவை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பில் 11 இளைஞர்கள், 2008–09 காலப் பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் 14 ஆவது சந்தேக நபராக சேர்க்கப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைத் தேடி வருகின்றனர்.

அவரது இரண்டு வசிப்பிடங்களிலும் இருந்து தலைமறைவாகியுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படுவதைத் தடை செய்யும் இடைக்கால உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் கடந்த வாரம் தமது சட்டவாளர்களின் ஊடாக அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்ற அமர்வில் இடம்பெற்றது.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 2008 - 2009 காலப் பகுதியில் தனது உயர்மட்டத்துக்கு அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட அறிவித்திருந்தார் என்று ஜனாதிபதி சட்டவாளர் ரொமேஷ் டி சில்வா உயர் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அத்துடன் போரை வெற்றி கொண்ட தளபதியான அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் கைது செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் அழுத்தம் வழங்கி வருக்கின்றன எனவும் அவர் மன்றில் கூறினார்.

இந்த நிலையில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கி உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதேவேளை, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை கைது செய்வதற்கு தடை உத்தரவு வழங்கவேண்டாம் என்று கோரி 11 இளைஞர்களில் ஒருவரின் தாயாரான சரோஜா நாகநாதன், உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் இடைபுகு மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றில் மறைந்திருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார்.அவரிடமிருந்து 2 வாள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தலைமறைவாகியிருந்த இந்தச் சந்தேக நபரை யாழ்ப்பாணம் சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சாவகச்சேரி மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கிருஷ்ணன் இந்துஜன் (வயது–24) என்ற சந்தேக நபரே கைது செய்யப்பட்டார்.

ஆவா குழுவிலிருந்து செயற்பட்ட இந்தச் சந்தேக நபர், மானிப்பாய் தனுறொக் என்பவர் மற்றும் அவருடன் தொடர்புடையவர்களின் வீடுகளைத் தாக்கி வந்த கும்பலைச் சேர்ந்தவர். அத்துடன் கடந்த ஆண்டு மருதனார்மடம் பகுதியில் சுன்னாகம் பொலிஸாரால் வாள்களுடன் கைது செய்யப்பட்ட கும்பலில் இருந்து இந்த நபர் தப்பியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த ஒரு வருடமாகத் தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் தனங்களப்புப் பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருக்கின்றார் என்று யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவுக்குத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான ரஞ்சன் எதிரிசிங்க தலைமையிலான அணியினர் நேற்று முன்தினம் நள்ளிரவு சந்தேகநபர் மறைந்திருந்த வீட்டைச் சுற்றி வளைத்தனர்.

பொலிஸார்சுற்றிவளைத்ததை அறிந்த சந்தேக நபர் தப்பிக்க முயற்சித்தவேளை கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து வாள்கள் இரண்டு, முகமூடிக் கப்புகள் மூன்றும் கைப்பற்றப்பட்டன.

சாவகச்சேரி, சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் தலா 2 குற்றச்செயல்களிலும்மானிப்பாய் பொலிஸ்பிரிவில் 3 குற்றச்செயல்களிலும் சந்தேகநபருக்கு எதிராக வழக்குகள் உள்ளன.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சாவகச்சேரிப் பொலிஸாரால் சந்தேநபர் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்ட வாள்களை நீதிமன்றில் சமர்ப்பிக்காமல் அவரைப் பிணையில் விடுவிப்பதற்காக சாவகச்சேரி பொலிஸாரால் பணம் பெறப்பட்டுள்ளது என்று விசாரணைகளில்தெரியவந்துள்ளது.

அத்துடன், சந்தேகநபர் கைது செய்யப்படாமல் மறைந்திருப்பதற்கு சாவகச்சேரி பொலிஸார் உதவினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ-07)

## அலுவலகர்களுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரம் பிரத்தியேக பயணப் பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனப் போக்குவரத்து மற்றும் சிவில்விமானசேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெண்கள் பொது போக்குவரத்து சேவைகளில் முகம் கொடுக்க நேரிடும் சிரமங்கள் மற்றும் தொல்லைகள் என்பவற்றை முடியுமான வரை தவிர்ப்பது இதன் நோக்கம் எனவும் கூறப்படுகின்றது.

முதல் கட்டமாக அலுவலக ரயில்களில் மட்டும் இந்த விசேட மகளிர் சேவையை வழங்கவுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ரியூனியன் தீவுக்குச் செல்ல முயன்ற 30 பேர் கடற்படையினரிடம் சிக்கினர்!

சட்டவிரோதமான முறையில், படகு மூலம் இலங்கையில் இருந்து வெளிநாடு செல்ல முயற்சித்த 30 பேர் கடற்படையினரால் நேற்றுகைதுசெய்யப்பட்டுள்ளனர். தெற்குக் கடற்பரப்பில் 80 கடல் மைல் தொலைவில் படகு ஒன்றில் இருந்த இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் எனக் கடற்படை கூறியுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் கடற்படை படகு மூலம் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் ரியூரியன் தீவுக்குச் செல்லமுயன்றதாககூறப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில், படகு மூலம் இலங்கையில் இருந்து வெளிநாடு செல்ல முயற்சித்த 30 பேர் கடற்படையினரால் இன்று கைது செய் யப்பட்டுள்ளனர். தெற்கு கடற்பரப்பில் 80 கடல் மைல் தொலைவில் படகு ஒன்றில் இருந்த இவர்கள் இன்று அதிகாலைகைதுசெய்யப்பட்டதாக கடற்படை கூறியுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்கள் கடற்படை படகு மூலம் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் ரியூரியன் தீவுக்குச் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.

## சர்வதேசத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வியாழக்கிழமை வரவு – செலவுத் திட்டம் மீதான இரண்டாம்நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. 34 -1 தீர்மானத்துக்கமைய எழுத்து மூலமான அறிக்கை நாளை (இன்று) ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சொந்த விவகாரங்களைத் தாமே கையாள்வதற்கு ஐ.நா.விடம் வேண்டுகோள் விடுக்கும் வகையில் 3 பிரதிநிதிகளைஐ.நாவுக்குஅனுப்பி வைக்கவுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழப்பமான அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

உள்நாட்டு விவகாரங்களைத் தாமே கையாள்வதற்கு இலங்கைக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படாத நிலையிலேயே சர்வதேச விசாரணைக்குக் கட்டளையிடப்பட்டது.

அரசின் செயற்பாடுகளின் தாமதம் எம்மை ஏமாற்றமடையச் செய்துள்ளது. காணாமற்போனோர் அலுவலகம் நியமிக்கும் பணிகளிலும் மிகுந்த தாமதம் நிலவியது. ஆனால், இந்தத் தாமதங்களுக்கானகாரணம்கூட முன்வைக்கப்படவில்லை.

இந்நிலையில், ஐ.நா.வின் புதியதீர்மானம்இலங்கைஅரசால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அந்தத் தீர்மானத்தை ஏற்று அதற்கு இணை அனுசரணை வழங்க வேண்டும். அது இலங் கையின் கடப்பாடு.

இது தொடர்பாகவும் கூட்டமைப்புக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. அதாவது நாம் அரசுக்குக் கால அவகாசம் வழங்குவதாகத் தெரிவிப்பது முற்றிலும் பொய்யான பரப்புரை. புதிய தீர்மானம் நிறைவேற்றப்படாவிடின் இந்த விடயங்களைச் சர்வதேச சமூகம் கையாள முடியாது. இதனையே ஜனாதிபதி கோருகிறார். ஆனால், இதற்கு இடமளிக்காது உலகத்துக்கு இலங்கை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்யப்படவேண்டும்–என்றார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் எச்சங்களே இவை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் பீட்டா அனாலிடிக் நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட காபன் அறிக்கை மன்னார் நீதவான் ரி.சரவணராஜா நேற்று விடுத்த கட்டளையை அடுத்து பகிரங்கப்படுத்தப்பட்டது. அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதைகுழி அகழ்வைத் தொடருவதா நிறுத்துவதா என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும், முடிவு எடுக்கப்படும் வரையில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படும் என்றும் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருபவை வருமாறு:–

வவுனியா, நெடுங்கேணி, பெரியமடுப் பகுதியில் வசித்து வந்த 8 வயது சிறுவன் ஒருவன் நேற்று முந்தினம் மாலை 5 மணியளவில்காணாமல்போயுள்ளான். பாடசாலை சென்று வீடு திரும்பிய இந்தச்சிறுவன் தனது தாயாருடன் ரியூசன் சென்று வீடு திரும்பியிருந்தார். அதன்பின் தனது வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள தனது அபபப்பா வீட்டிற்கு தோட்டத்தினுடாக சென்றிருந்தார். இருப்பினும் சிறுவன் அப்பப்பா வீடு செல்லவில்லை.

சிறுவன் செல்லும் போது ஆஸ்திரேலியாவில் உள்ள தனது கணவருடன் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்ததாயார் உரையாடி முடிந்த பின் சிறுவன் சென்ற வீட்டிற்கு சென்ற போது அங்கு சிறுவன் வரவில்லை என சிறுவனின் அப்பப்பா தெரிவித்துள்ளார். அதன்பின் இரவிரவாக உறவினர்கள் இணைந்து தோட்டம் மற்றும் தோட்ட கிணறுகள் எல்லாம் தேடிய நிலையில் சிறுவனை காணவில்லை.

இதன்பின் நேற்றுக் காலை கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் தாயார் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், சிறுவனை சிறுவனின் தந்தை வெளிநாடு செல்ல காரணமான ஏஜென்சி கடத்தி வைத்திருப்பதாகவும் 35 லட்சம் ரூபா தந்தால் சிறுவனை விடுவிப்பதாகவும்தாயின்தொலைபேசிக்கு காலை அழைப்பு ஒன்று வந்திருந்தது. கடத்தப்பட்ட சிறுவனும் தொலைபேசியில் பேசியுள்ளான் என்று கூறப்படுகிறது. இதன்போது சிறுவன் தன்னைக் கூட்டிச் செல்லுமாறு தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார். மாலையும் பிறிதொரு தொலைபேசியில் இருந்து 35 லட்சம் ரூபா பணம் தருமாறு கோரி தாயாருக்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொலைபேசி இலக்கங்களையும் பெற்றுக் கொண்ட கனகராயன்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். திரிபரஞ்சன் தமிழவன் என்ற 8 வயது சிறுவனே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளான்.

# அமெரிக்க, நெதர்லாந்துத் தூதுவர்கள் வடக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 08

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி ரெப்லிட்ஸ் மற்றும் நெதர்லாந்து தூதுவரான ஜோன்னே ஆகியோர் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களின் பொருளாதார நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநர் விளக்கமளித்ததுடன், இந்த மக்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்குச் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்துமாறும் இரு நாட்டுத் தூதுவர்களிடமும் கோரிக்கை விடுத்தார். அத்துடன் வடக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்ப வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் மற்றும் நிபுணர்களின் தேவைகள் குறித்தும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)



## லால் காந்தவுக்கு பிணை

கொழும்பு, மார்ச் 08

அனுராதபுரத்தில் குடிபோதையில் விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட லால் காந்தவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் பிரதேசத்தில் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் ஜே.வி.பி.யின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி. லால் காந்த கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றபோது லால் காந்தவை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (ஐ)

## கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரி அவசர இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 08

கொழும்பு குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நெவில் சில்வா உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் நெவில் சில்வாவை இடமாற்றம் செய்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதி பெறப்படவில்லை என ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எனினும் அவசியத் தேவை நிமித்தம் காரணமாக இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இடமாற்ற அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரைக் கொலை செய்யுமாறு உயர் இடத்திலிருந்து வந்த சட்டவிரோத உத்தரவைச் செயற்படுத்தாமை காரணமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் நெவில் சில்வாவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் கூறின. (ஐ)

## தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டது ரணில் அரசு

### தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பெருந்தோட்ட தொழிலாளர்களைஏமாற்றிவிட்டது எனஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிவாரணம் வழங்குவதாக அரசு கூறியிருந்தபோதிலும், அவ்வாறு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக்காக அந்த மக்கள் போராடிய நிலையில் அது கிடைக்கவில்லை. எனவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால், நிதியமைச்சர் மங்கள சமவீரவினால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இந்த விடயம் குறித்து எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

எனவே, இது தொடர்பாக மனோ கணேசன் என்ன செய்யப்போகிறார் என்பதே மலையக மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

எனவே, வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவளிப்பது குறித்து பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களான மனோ கணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் மக்கள் சார்பாக சிந்தித்து தீர்மானமெடுக்கவேண்டும்-என்றார். (ஐ)

## சட்டவிரோத மதுபானம் குறித்து தகவல் வழங்க விசேட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, மார்ச் 08

சட்டவிரோத மதுபானம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு மூன்று தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் மா அதிபரினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, சட்டவிரோத மதுபானம் தொடர்பான தகவல் அறிந்தோர் 0113024820, 0113024848, 0113024850 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு அறிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வன்னி அறுசுவை உணவகத்தை நேற்று திறந்து வைத்த சந்திரிகா





வவுனியா, மார்ச் 08

வவுனியா நெடுங்கேணியில் வன்னி அறுசுவை உணவகம் நேற்று முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயலகத்தின் பணிப்பாளருமான சந்திரிகா குமாரதுங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு நெடுங்கேணி பிரதேச செயலகக் கலாசார மண்டபத்தில், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயலகத்தினால் வடக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் பற்றியும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் பொதுமக்களுடன் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பின்னர் உணவகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், பிரதேச சபைத் தலைவர் இ.தணிகாசலம், அரச அதிபர் எம்.ஹனீபா, பிரதேச செயலர் க.பரந்தாமன், அரச அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.